# மேழி விளக்கம்

ஆசிரியர் :

சரவணையர்.

பதிப்பாசிரியர் :

வித்துவான், வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்.

# மேழி விளக்கம்

(சென்னிமலையாண்டவர் மகிமை கூறும்
வேளாளர் வரலாற்று நூல்)

பதிப்பாசிரியர் :

வித்துவான். வே ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்

1963

விலை : 0-75 காசு.



சென்னிமலைத் தோற்றமும், கைலாச நாதர் கோபுரமும்.

# சென்னிமலைத் திருப்புகழ்

பகலிரவினில் தடுமாறு
பதிகுருவெனத் தெளிபோத
இரகசியமுரைத் தனுபூதி
ரதநிலைதனைத் தருவாயே
இகபரமதற் கிறையோனே
இயலிசையின்முத் தமிழோனே
சகசிரகிரிப் பதிவேளே
சரவணபவப் பெருமாளே!

—அருணகிரிநாதர்.

## எழுமாத்தூர் வேலம்பாளையம், வித்துவான்

# வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்ட

## அவர்கள் தாமாகவும், பிரதிகொடுத்துப் பிறர் மூலமாகவும் பதிப்பித்து வெளிவந்த தமிழ் நூல்கள்

---

1. சிவகிரி வேலாயுதசுவாமி இரட்டைமணிமாலை
2. சிவகிரிச் சண்முகமாலை
3. கண்ணப்பரம்மானை
4. எழுமாத்தூர்ச் சத்திநாதர் சிவக்கொழுந்துமாலை
5. சர்வலோக நாயகி ஒருபா ஒருபஃது
6. கனககிரி வெண்பா
7. திருப்பாண்டிக் கொடுமுடித் தலபுராணம் உரைநடை
8. நட்டாற்றீசுவரன் கோயில் தலபுராணச் சுருக்கம்
9. வடிவுள்ள நாயகி பஞ்சரத்நம்
10. ஈரோடு தொண்டீசுரர் ஐமணிமாலை
11. வாரணியம்மன் வருகைப்பதிகம்
12. மாணிக்கவாசகர் நிலைமண்டிலவாசிரியப்பா (குறிப்புரையுடன்)
13. கோனேரியப்ப முதலியார் (வரலாறு, பாடல்கள்)
14. ஈரோடை ஐயனாரப்பன் பள்ளு நாடகம்
15. திங்களூர் நொண்டி (காலச்சக்கரம்)
16. சித்திரமடல்
17. கொன்றை வேந்தன் வெண்பா
18. சென்னிமலைப் பிள்ளைத் தமிழ் பத்து (குறிப்புரையுடன்)
19. சிவன்மலைப் பிள்ளைத் தமிழ் பத்து ,,
20. திருச்செங்கோட்டுப் பிள்ளைத் தமிழ் ,,

21. தாயுமானவர் மடல் குறிப்புரை முதலியவற்றுடன்
(உரைவளம்) தருமபுரவாதீனம்

22. அறச்சலூர் நாகமலையாண்டவர் குமார பஞ்சகம்

23. பாரத சங்கிரகம். அண்ணாமலை யூனிவர்சிடி

24. தேவிமான்மியம் விரிவுரையுடன் (ஞானசம்பந்தம்)
தருமபுரமடம்

25. திருக்குறள் காளிங்கருரை பரிதியுரை தருமபுரவாதீனம்

26. திருமுருகாற்றுப்படை கவிப்பெருமாளுரை, பரிதியுரை
(திருமுருகாற்றுப்படை உரைக்கொத்து)

27. தேவிமான்மிய மூலம் குறிப்புரையுடன்

28. சிவஞான போதத்திருவிருத்தம் பழையவுரையுடனும்
முன்னுரையுடனும் கூடியது
(செந்தமிழ்ச்செல்வி) சைவசித்தாந்தக்கழகம், சென்னை

29. கம்பராமாயண ஏட்டுச் சுவடிகள் 5. அண்ணாமலைப்
பல்கலைக்கழக ஆராய்ச்சிப்பதிப்புக்காக.

உ

கணபதி துணை

# முகவுரை

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் தன்மடந்தை
தோளாகம் பாகமாப் புல்கினான் தொல்கோயில்
வேளாளர் என்பவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே !

மருவுலவு பூமல ரெடுத்துநின் சேவடி
மலர்தனில் தூவி நித்தம்
தருவுலவு செய்கைதிகழ் நின்புரா ணப்புகழ்
சாற்றவெற் கருள வேண்டும்
உருவுலவு நோய்பகை வறுமைதீர்த் தடியருக்
குயர்பதந் தனைய ளிக்கும்
திருவுலவு சோலையில் தென்றல்தவழ் பொய்கைசூழ்
சென்னிமா மலைவேல னே !

—பதிப்பாசிரியர்.

மக்கள் உயிர்வாழ்க்கைக்கு உணவு வேண்டும். உணவின்றி மக்கள் உயிர் வாழ்தல் இயலாது. ‘உண்டி முதற்றே உணவின் பிண்டம்’ (புறம்-18) ‘மக்கள் யாக்கை உணவின் பிண்டம்’ (மணிமேகலை) உழவே உணவுப் பொருள் உற்பத்தி செய்வது ஆதலின் தொழில்களில் உழவு முதலிடம் பெறுவதாயிற்று. உழவு வேளாளருக்குரிய சிறந்த தொழில். ‘வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது, இலவென மொழிப பிறவகை நிகழ்ச்சி’ என்பது தொல்காப்பியம் மரபியல் சூத்திரம். “வேளாண் மாந்தர்க்குத் தொழில் உழவே என்றவாறு” என்பது இளம் பூரணம். தொன்மை தொடங்கி நிலவுரிமை பெற்று மண்மகள் புதல்வர், நிலக்கிழார் என்னும் பெயர்க்குரியவர்களாய் உழவுத் தொழிலால் உலகைப் புரந்து வருவோர் வேளாளர்களே.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'

'உழுவார் உலகத்தார்க் காணி' என்பன திருவள்ளுவம்.

ஏனையோர்பால் காணப்பெறாத சில சிறப்பான இயல்புகள் வேளாளரிடத்தே உண்டு. 'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான்' (திரிகடுகம்) 'வேளாளர் என்பவர்கள் வள்ளன் மையால் மிக்கிருக்கும் தாளாளர்' (திருஞான சம்பந்தர்) 'எருது டையான் வேளாளன்' (நான்மணிக்கடிகை) என்பனவெல்லாம் வேளாளரின் சிறப்பியல்புகளை அறிவிப்பன. உழவில் சிறந்தது கொங்கு நாட்டு உழவே. ஆதலின் 'கொங்கத்து உழவு' 'வங்கத்து வாணிகம்' என்பர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர்.

பழந்தமிழ் நூல்களால் அறியப்படும் தமிழகத்து வாழும் † நால்வகை மக்கட் பிரிவினருள் வேளாளர் குலமக்கள் பிரிவைச் சார்ந்தவராவர். வேளாளர், உழுதுண்ணும் வேளாளர், உழுவித் துண்ணும் வேளாளர் என இருவகையினர் ஆவர். நாட்டில் நல்லரசு நிலைபெறுவதற்குக் காரணமானவர்கள் வேளாளர்களே. தமிழ் வேந்தர்கள் வேளாளர் இல்லங்களில் மணம் செய்து வந்தனர். வேளாளர்களை நன்கு பாதுகாக்கும் அரசாங்கமே நாட்டில் நிலைவுறும். அரசு வலிவுற்றிருக்க வேண்டுமானல் வேளாளர்கள் வலிவுற்றிருக்க வேண்டும். இக்கருத்தினைச் சங்கப் புலவராகிய வெள்ளைக்குடி நாகனர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனுக்குச் செவியறிவுறுத்தியுள்ளார்.

---

† குலமக்கள்—அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்.

நிலமக்கள்—ஆயர், கானவர், மறவர், தொழுவர், பரதவர்.

'ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே'
'ஏனோர் மருங்கினும் எண்ணுங் காலை
ஆஞ வகைய திணைநிலைப் பெயரே' (தொல். அகத்திணையியல்)

வினைமக்கள்—கொல்லர், தட்டார், தச்சர், குயவர், நாவிதர், வண்ணார், மாலைகட்டியர் முதலியோர்.

குடிமக்கள்—பாணர், பறையர், துடியர், கடம்பர்.

'பாணன் பறையன் துடியன கடம்பனென்று
இந்நான் கல்லது குடியுமில்லை (தொல்-மேற்கோள்)

*பகடுபுரந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுரந் தருகுவை யாயின்நின்
அடிநிழல் அடங்குவர் அடங்கா தோரே (புறம்)

இக்கருத்தையே வள்ளுவனாரும்

† 'பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்' என்று கூறுகின்றார்.

உழவு பொதுவகையில் பலராலும் செய்யப்படுகின்றதெனினும் சிறப்புவகையில் அத்தொழிலுக்குரியவர்கள் வேளாளர்களே. அரசர்கள் அவர்களை நன்கு பாதுகாத்தால் அவர்கள் தொழில்களிற் கடினமான அதனை மனதில் தளர்ச்சி கொள்ளாமல் நன்றாகச் செய்வார்கள். அதனால் நாட்டில் உணவுப்பொருள்கள் மிகுதியாகும். மக்கள் பசி பட்டினியின்றி நல்வாழ்வுறுவர். மேலும் விளைபொருள்கள் மிகுவதால் நாட்டில் வாணிகம் ஓங்கும். செல்வம் கொழிக்கும். படைப்பல பெருகும் பிறநாட்டு வேந்தர் அடங்கி யொழுகுவர். நாட்டின் பொருளாதாரமே பகைவர்களாகிய இருளையோட்டும் பொய்யா விளக்காம் என்பது அறிஞர்களின் முடிபு. ஆதலின் அரசர்கள் பொதுநோக்கங் கொள்ளாமல் சிறப்பு வகையில் வேளாளரைப் பேணுதல்வேண்டும்.

தமிழ் மன்னர்கள் காடுகொன்று நாடாக்கியும், குளந்தொட்டு வளம் பெருக்கியும், ஆறில் ஒரு கூறு வரிவாங்கியும் வேளாளர்களைக் காத்து வந்தனர். தொல்காப்பியர், திருவள்ளுவனார், ஔவையார், கம்பர், சேக்கிழார் முதலிய புலவர்கள் தம் நூல்களில் வேளாளர்களையும் அவர்கள் செய்யும் உழவுத்தொழிலையும்பற்றிப் பாராட்டிக் கூறியுள்ளனர். வேளாளர்களைப்பற்றிக் கூறும் பிற்காலத்துத்தனி நூல்களும் பல உண்டு அவற்றுள் என் பார்வைக் கெட்டிய சில நூல்களைப்பற்றிய குறிப்புக்களை ஈண்டுத் தருகின்றேன்.

**ஏரெழுபது**:—கம்பர் பாடியது.

'கங்கைபெறுங் காராளர் கருவியெழு பதுமுரைக்க' என்று காப்புச்செய்யுள் கூறுவதனால் உழவு கருவிகள் எழுபதன் சிறப்புக்

---

* பகடு—எருது; புரந்தருநர்—பாதுகாக்கும் வேளாளர்; பாரம்—கூட்டம்;
குடி—ஏனைய குடிகள்.

† அலகுடை நீழலவர்—நெற்கதிரின் நிழலையுடைய உழவர்.

கூறுவது இந்நூல் என அறியலாம். சோழ நாட்டின் எழுபத்தொன்பது வளநாடுகளிலும் வேளாளக்குடிகள் வாழ்ந்தார்களென்று இந்நூல் தெரிவிக்கிறது. இந்நூலில் வேளாளர் "மேழித்தேவர்" என்றும், "சாதிவளம் படைத்துடைய தாயனைய காராளர்" என்றும், "உலகமுதற்கரு" என்றும், 'வெய்யகலி தொலைக்கும் வேளாளர்' என்றும், 'அனைத்துயிர்க்கும் எழுங்கருணைப் பெருக்காளர்' என்றும், 'செந்தமிழ்க்கு முதலாய திருவாளர்' என்றும், 'நீடுபெரும் புகழ்படைத்த நிலமடந்தை திருமக்கள்' என்றும் போற்றப்படுகின்றனர்.

**திருக்கை வழக்கம் :—** கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் மனமுவந்து வேளாளர்களைப் பாடிய நயமிக்க நூல்களில் இதுவும் ஒன்று. இந்நூல் 59 கண்ணிகளையுடையது. தொன்மையில் மும்மண்டலங்களிலும் வாழ்ந்து அருஞ்செயல் புரிந்து புகழெய்திய வேளாளகுலச் சான்றோர் பலரின் திருக்கரங்களை அவர் செய்த புகழ்மிக்க செயல்களாற் புகழ்ந்து கூறுவது. இந்நூல் கலிவெண் பாவால் ஆயது.

'மேழிக் கொடிசிங்க வெற்றிக் கொடிகுயிலின்

வாழிக் கொடியே மருவுங்கை'

'நாவிற் புகழ்கம்ப நாடற் கடிமையென்றே

மாவைக் கரைத்துமுன்னே வைக்குங்கை'

'மண்ணிற் கடலின் மலையிற் பெரியதென

எண்ணியெழு திக்கொடுத்த ஏற்றக்கை'

என்று வேளாளர் கை புகழப்படுகின்றது. மூன்றாவது கண்ணியில் சேக்கிழார் கைத்திறம் புகழப்படுகின்றது. ஆதலின் கம்பர் சேக்கிழாருக்குப் பிற்பட்டவர் எனத்தெரிகிறது. சேக்கிழார் அநபாய சோழன் என்னும் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்தவர், கி. பி 1123 முதல் 1148 வரை. கம்பர் காலம் இரண்டாம் இராசராசன் காலம் கி. பி. 1171 முதல் 1178 வரை.

'வேதமொரு நான்கினையும் மிக்கதமிழ் நாலடியால்

ஓதியுரைத் தேகருணை ஓங்குங்கை'

இதனால் நாலடி, வேளாளர் வேதம்போல ஓதிவந்த நூலெனத் தெரிகிறது.

'வெள்ளாண் மரபுக்கு வேதமெனச் சான்றோர்கள்
எல்லாருங் கூடி யெடுத்துரைத்த—சொல்லாய்ந்த
நாலடி நானூறும் நன்கினிதா என்மனத்தே
சீலமுடன் நிற்க தெளிந்து'

என்னும் நாலடிப்பாயிரப்பாடல் கம்பர் காட்டிய கொள்கைக்கு உறுதுணை செய்கிறது. இவற்றால் நாலடி வேளாளர் ஓதுதற்குரிய நூல் என்பது புலனும் 'சங்கைகுலந் தழைக்க' என்று தொடங்கிக் 'காராளர் கற்பகப்பூங் கை' என்று முடிவு பெறுகின்றது இத்திருக்கை வழக்கம்.

**மேழி எழுபது :—** குன்றத்தூர் அட்டாவதானம் சொக்கநாதப் புலவர் பாடியது.

'மேழிப் பெருக்கத்தை வேளாளர் மேற்சொல்ல' என்று காப்புச் செய்யுள் தொடங்குவதனால் இந்நூலுக்கு மேழிப் பெருக்கம் என்பதும் பெயர். இது காராளர் மேழிப்பெருஞ் செல்வத்தின் சிறப்புக்கூறுவது. உழவு செய்தற்குரிய நல்ல நாள் முதலியனவும் கூறப்படுகின்றது. திருவள்ளுவம் தொல்காப்பியம் ஆகிய நூல்களில் உழவுதொழிலும், வேளாண்மாந்தர் சிறப்பும் கூறப்படுவதை ஆசிரியர் சில செய்யுட்களில் சுட்டிக்காட்டியுள்ளார்.

"சிறப்பொடு பூசனை தேவர் தமக்கும்செல் லாதுமழை
வறப்பினென் றோர்குற ளோர்குறித் தேசொன்ன மார்க்கமதா
முறப்பய னேரி னுழாஅரென் பராற்பின் னுலகினுக்குப்
பிறப்பிட மானது காராளர் மேழிப் பெருஞ்செல்வமே.

"தரும்பான்மை மேழிச்செல் வங்கோழை யில்லெனத் தாயவ்வையார்
அரும்பான்மை சொல்லினள் வேளாண்மை மாந்தரவர்க்குழுதூண்
வரும்பான்மை கொள்ளுவ ரென்றார்தொல் காப்பியர் மற்றுமுள்ளோர்
பெரும்பான்மை யென்றது காராளர் மேழிப் பெருஞ்செல்வமே.

"ஏராருங் குனறை நகர்ச்சொக்க நாத னியம்புகின்ற
சீராரு மேழி யெழுபது தான்கொங்கு சேலத்திலே
காராளர் தொண்டைநன் னாட்டார் சபையிற் சகாரத்திலாண்
டோரா யிரத்தறு நூற்றுப்பத் தைந்தினி லோதியதே.

இப்பாடலால் இந்நூலாசிரியர் சாலிவாகன சகாப்தம் 1615—கி. பி. 1693ல் வாழ்ந்தவரெனத் தெரிகிறது இந்நூல் இன்னும் அச்சாகவில்லை. இவரே தஞ்சைவாணன் கோவைக்கு சிறந்ததோர் உரையையும் இயற்றியவர். ‡ திருச்செங்கோட்டுப் பிள்ளைத்தமிழ் திருவெள்ளூர்த் தலபுராணம் முதலிய நூல்கள் இவரால் பாடப் பெற்றவை இவர் தொண்டைமண்டல வேளாளகுலத்தினர். கூடற்கிழார் கோத்திரத்திற் பிறந்தவர்.

**மரபாள சூடாமணி** :— இந்நூல் வைசிய வேளாளர்களைப் பற்றிக் கூறுவது. 120 விருத்தங்களால் ஆகியது. அவையடக்கத்தில்,

"நாகமணி யுஞ்சிவனுர் நற்கிரியைச் சேர்ந்தனுகுங்
காகநிற மகன்று கனகநிற மானாற்போல்
பாகவத னநதாரி பாட்டிழிவு தானகற்றி
மாகவிதைப் புலவோர்கள் மரபணுகப் பொன்னுமே"

என்பதனுல் இந்நூலாசிரியர் 'பாகவதன் அநதாரி' எனத் தெரிகின்றது. இவர் விஜயநகர சாம்ராஜ்யப் பிரதிநிதி அச்சுத ராயனுல் பாராட்டப்பெற்று 'புலவர் சிங்கம்' 'தமிழ்க் கொண்டல்' எனச் சிறப்புப் பெயர் பெற்றவர். இவர் வைணவ சமயத்தவர். காலம் கி. பி. 16-ஆம் நூற்றுண்டின் முற்பகுதி. வருணம் நான்கினையும் மூன்றும் எனத் தொகுத்துக் கூறுவதிந் நூல். 'தமிழுடன் பிறந்துவந்த குலப்புகழ்சாற்றலுற்றேன்' என்றும் 'வடகலையைத் தென்கலையா லிசைக்கலுற்றேன்' என்றும் கூறுகின்றுர். இந்நூல் அச்சானதாகத் தெரியவில்லை.

இந்நூல், வேளாளர் வைசிய வருணத்தைச் சேர்ந்தவரெனக் கூறுகின்றது. இந்நூல் சிறப்புப்பாயிரம், வருண உற்பத்தி,

---

‡ இது வித்துவான் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டரெழுதிய ஆராய்ச்சிக் குறிப்புரை முன்னுரை முதலியவற்றுடன் கூடியது. பழனி தேவஸ்தான நிர்வாகக்குழுவின் தலைவர் திரு. V. V. C. R. முருகேச முதலியார் அவர்களின் பொருளுதவியால் அச்சிடப்பெற்றது.

வைசிய உற்பத்தி, கோத்திர உற்பத்தி, சூத்திர உற்பத்தி, தசாங்க வரலாறு, குல உற்பவம், வேத உற்பவம் என்னும் பிரிவுகளைக் கொண்டது. வேளாளர்களிடத்தே 'சீவகஞர் புகழுரைக்கும் சிந்தாமணி'யைப் பயிலும் வழக்கம் மிக்கிருந்ததென்று இந் நூலால் அறியலாம். வைதீக ஆசாரங்களை வேளாளர்க்குரிய நித்தியகன்ம நெறிகளாக இந்நூல் விரித்துக் கூறுகின்றது.

மரபாள சூடாமணி கூறும் வைசிய வேளாள வரலாற்றுச் சுருக்கம் :—

வைசியருற்பவம் :— பரமசிவன் கட்டளைப்படி திருமாலின் கலைகளில் ஒன்று கங்கைக்கரையில் மகுடமும் முந்நூலும் விளங்கக் கலப்பைப்படையைக் கையிலேந்தி வைசியனுசத் தோன்றியது. அவனுக்கு மரபாளன் என்று பெயர். அம்மரபாளன் குபேரன் மகளையும் இந்திரனுக்கு ஊர்வசிபால் தோன்றிய இரணியவதி என்பவளையும் மணம் புரிந்து கொண்டான். மரபாளன் மனைவியர் இருவரும் கொன்னைகிழார் முதல் கனக தமிழாளர் ஈருகவுள்ள நூற்ருறு புதல்வர்களையீன்றனர். போதாயனர் என்னும் முனிவர் இப்பிள்ளைகளுக்கு 'வேளாள தீரர்' எனப் பெயர் சூட்டினுர். அவரே சாதகன்மம் உபநயனம் முதலியவைகளும் செய்வித்தார் பிரமன் இப்பிள்ளைகளைப் பார்த்து நீங்கள் வைசியர் ஆவீர்களென்று கலப்பை எருது திராசு பசும்பை ஆகியவைகளையும் கொடுத்து உங்களுக்கு உழவும் வாணிகமும் தொழிலாகுமென்று கூறினுன்.

சூத்திரர் உற்பவம் :— அப்பிள்ளைகள் நூற்ருறு பேர்களும் நளகூபரன் பெற்ற மகளிர்கள் நூற்ருறு பேர்களையும் மணம் செய்து கொண்டனர். அவர்களிடம் பன்னீராயிரம் புதல்வர்கள் பிறந்தார்கள். இவர்களே நாலாஞ்சாதி. இவர்களுக்கு வைசியர், வேளாளர், மன்னர் பின்னவர், வணிகர், நாயகர், உழவர், இப்பர், செட்டர், காராளர், கோவலர், பூமிபாலகர், சங்கை மைந்தர் என்று பெயர் கூறப்படும். இவர்கள் போதாயனர் செய்த சூத்திரப்படி எட்டாம் நாளில் சூதகம் தீர்ப்பதாலும் மணவினை செய்தலாலும் சூத்திரர் எனப்படுவர்.

**பசும்பையெழுபது** :— இது வைசிய வேளாளர் புகழ்கூறும் எழுபது பாடல்களையுடைய பழைய நூல். இது வைசிய வேளாளர்க்குரிய டை முதலியவற்றைக் கூறுதலால் பசும்பையெழுபதெனப் பெயர் பெற்றது. நூலாசிரியர் பெயர் தெரியவில்லை.

**வேளாள புராணம்** :— இந்நூல் வீராட்சிமங்கலம் கந்தசாமிக் கவிராயரவர்களால் 1373 விருத்தப்பாக்களால் திட்பமும் நுட்ப

மும் சிறப்பப்பாடப்பெற்றது 29 படலங்களையுடையது. "காராளர் தமைப் புகழ்ந்த கம்பனுக்குப் பின்வந்த கப்பனுனேன்" என்று இந்நூலாசிரியர் பாயிரச் செய்யுளொன்றில் பாராட்டப்படுகின்ருர். சுமார் அறுபது ஆண்டுகளின் முன்பு பாடப்பெற்று 1907-ஆம் ஆண்டு கொங்கார்பாளையம் வைத்தியம் முத்துசாமி உபாத்தியாயரால் அச்சிடப்பெற்றது. இந்நூலின் ஏர்ப்படலம் மிகவும் பயனுடையது. இந்நூல் மரபாளு சூடாமணியை விரித்துக்காவிய இலக்கணங்கள் அமையச்செய்யப்பெற்றது.

**கொங்குமண்டல சதகம்** :—வாலசுந்தரக்கவிராயர் இயற்றியது. இது கொங்கு நாட்டிலுள்ள ஐதிகங்களையும் கொங்கு நாட்டு வேளாளர் குலங்களையும் அக்குலத்தின் பழம்பெருங்கீர்த்திகளையும் குறித்துப் பாடப்பெற்றது. இந்நூல் அச்சாகவில்லை. மற்றும் கார்மண்டல சதகம், பிழைச் சதகம், சோழமண்டல சதகம், தொண்டைமண்டல சதகம் முதலியனவும் வேளாளருடைய சிறப்பினைக் கூறுகின்றன.

**காணி நூல்** :—இது கொங்கு வேளாளர் குலங்களையும் கொங்கு நாட்டில் அவ்வக்குலத்தினருக்குரிய காணிகளையும் கூறும் ஆசிரிய விருத்தப்பாக்களாலாகிய ஓர் நூல். இதனை இயற்றியவர் கம்பநாதர் என்பவர். இவரியற்றிய ஆசிரியப்பாவாலாகிய மற்றொரு நூலும் உள்ளது. சோழ வேந்தன் ஒருவன் முன்பு உறையூர்ப் பாக்கத்து வாழ்ந்த வேளாளக் குடிகள் பலரைக் கொங்கு நாட்டிற்குடியேற்றுவித்தான் என்றும் வேளாளக் குடிகளுக்குத் தலைவராய் நான்கு பட்டக்காரர்கள் உண்டென்றும் அவர்களுக்கு நாட்டதிகாரமும் உடன் இருந்ததென்றும் கூறுகிறது. அந்நூலில் பச்சைமலையான் பவளமலையான் முதலிய நூற்றுக்கு மேற்பட்ட வேளாளகுலம் கூறப்பட்டுள்ளது. இவ்விரு நூலும் அச்சேறியதாகத் தெரியவில்லை.

**மேழி விளக்கம்** : - இந்நூல் மேழி பிடித்து உழவு செய்தற்குரிய வேளாளர்களின் வரலாற்றினை விளக்குப் போல விளக்கிக் காட்டும் நூல் இது எளிய செம்பாகமான இனிய கலிவெண்பா நடையில் இயன்ற 621 கண்ணிகளையுடையது. சென்னிமலை முருகர் திருவருள் மகிமையையுணர்த்துவது.

இந்நூலின் ஆசிரியர் சோழநாட்டுத் திருவெண்காட்டில் வாழ்ந்த கார்காத்த வேளாளகுல திலகராகிய சரவணையா என்பவர். (மேழி விளக்கம் 30-40 கண்ணிகள் காண்க) "டில்லி பாட்சாவிட்ட தேசமெனும் மைசூரும்" என்று இந்நூலின்

127-ஆம் கண்ணியில் கூறுவதால் இந்நூலாசிரியர் மைசூரை டில்லி முகமதியர்கள் ஆண்ட காலத்தவரெனத் தெரிகிறது.

கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் டில்லி முகலாயர் படையெடுப்பால் தமிழ் நாட்டில் மூவேந்தராட்சி முடிவுற்று வீழ்ச்சிடைந்தது. அக்காலத்தில் பலவேறு குலத்தினர் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தனர். அக்காலத்தில் மைசூர் டில்லி முகலாயர் ஆட்சிலிருந்தது. பின்னர் விஜயநகர அரசர்கள் மைசூர் அரசவமிசத்தினர் ஆகிய உடையார்கள் ஆகியோர் ஆட்சிக்கு வந்தது. பின்பு கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மைசூரை ஹைதர்அலி, திப்புசுல்தான் என்ற முகமதிய வீரர்கள் கைப்பற்றி ஆட்சி புரிந்தனர். இந்நூலில் டில்லி பாட்சாவின் பெயர் குறிப்பிடப்படுவதால் இந்நூலாசிரியர் அவர் வாழ்ந்த 14-ஆம் நூற்றாண்டினரெனத் துணியப்படுகின்றது.

தமிழகத்தில் மூவேந்தர்களின் ஆட்சி முடிவுற்ற பின்பு வந்த துட்டராகிய அரசர் சிலர் நாட்டில் வாழும் பலவகை மக்களுக்கும் பலவகையான கடும் வரி விதித்துக் கையிகந்த தண்டம் செய்தனர். நாட்டு மக்கள் நிலைகுலைந்தனர். அவர்களுள் வேளாளர்கள் பூமி முதலிய செல்வங்களையெல்லாம் விற்றுக்கொடுத்துவிட்டு உழவு தொழில் செய்ய முடியாதவர்களாய் நாடு திரண்டு சென்று சென்னிமலை வாழும் இடும்பக் குமரனிடம் முறையிட்டனர். இடும்பக்குமரன் கருணையால் சென்னிமலை முருகன் திருமுன்பை யடைந்து வணங்கி நின்று தம் குறைகளைக் கூறியருள்செய்து காக்குமாறு வேண்டினர். சென்னிமலை முருகப்பெருமான் அருள் செய்தபடியே துட்ட அரசர்கள் அழியவும் வேளாளர்கள் தத்தம் நாடடைந்து உழவு செய்து வளம்பெருக்கி அரசர்கள் போல நலமுற வாழ்ந்தனர் என்பது இந்நூலின் சுருக்கமான பொருள்.

மற்றும் இந்நூலின்கண் சென்னிமலையாண்டவர் திருத்தசாங்கச்சிறப்பு, மலை, ஆறு, நாடு, ஊர், யானை, குதிரை, கொடி மாலை முரசு ஆணை என்பவற்றின் வருணனைகள், வேளாளருக்குரிய ஏன வகைகள், விளைவுப்பொருள்கள், வேளாளர்கள் அரசர்களையொப்ப வாழ்தல், வேளாளர் கீர்த்திகள், கொடுங்கோலர் ஆட்சியில் வேளாளர் முதலியோர் அடைந்த துன்பங்கள். வேளாளர்களின் தோற்றம், திருமணச்செய்திகள், மணமக்கள் வரிசை, வேளாளருக்குரிய நாடு நகர் முதலியவைகள், நீலமலைச் சார்பில் வாழ்ந்த வேளாளர்களை மூவேந்தர்களும் அழைத்து வந்து குடிப் பிரிவு செய்து தத்தம் நாட்டிற் குடியேற்றுதல், நாட்டில் நல்ல மழை பொழிய வேளாளர்கள் உழுதொழிலால் வளம் பெருக்கி

நாடு நலமுறச்செய்தல் வேளாளரின் பலவகைப் பிரிவுகள் முதலிய செய்திகள் கூறப்படுகின்றன.

ஒவ்வோர் காலத்தில் நாட்டின் தீய சக்திகள் மக்கள் செய்த முன்வினைக்கேற்ப ஆட்சி புரிவதுண்டு. அக்காலத்தில் நாட்டில் அராஜகம் தாண்டவமாடும். மக்கள் பலவகைத் துயரங்களுக்காளாவர். மக்கள் செய்யும் முயற்சிகளால் அத்துயரங்கள் தடைபடுவதில்லை. அக்காலத்தில் மக்கள் சரண் புகுந்துய்வதற்குரிய நிலைக்களம் தெய்வத்தின் திருவடிகளேயாம். அத்தெய்வம் செங்கையில் வடிவேல் கொண்டு சென்னிமா மலையில் மேவும் செவ்வேள் முருகனேயாம் என்பதனை ஆசிரியர் இந்நூலின்கண் வரலாற்றுண்மையில் நன்கு அறிய வைத்துள்ள செய்தி அறிந்து போற்றுதற்குரியது.

> "குடித்தனங்கள் செய்திந்தக் குவலயத்தில் வாழ்வதற்குப்
> பிடித்தகொம் பெல்லாம் பெலனில்லை—வடித்தசுடர்
> வேலவனே யல்லாமல் வேறுதணை யில்லையென்று
> ஞாலமதில் வேளாளர் நாடிவந்தோம்" (275—276)

இதனால் கொங்கு நாட்டு வேளாளரும் ஏனைநாட்டு வேளாளரும் தத்தம் நாடுகளிலும் பிறநாடுகளிலுமுள்ள பல தலங்களில் இறைவனை வணங்கி வழிபடும் நியமமுடையவராயினும் தாம் துன்ப காலத்தில் புகல் புகுதற்குரியதும் முருகன் அருள்பெற்றுய்தற்குரியதுமாகிய முக்கிய திருத்தலமாகக் கொண்டிருந்தது சென்னிமலையேயாம் என்பது நன்கு விளங்கும்.

இந்நூலின்கண் உவமை சிலேடை முதலிய அணி விசேடங்கள் பலவுண்டு. விரிப்பின் பெருகுமாதலின் நூல் நோக்கியறிந்து கொள்க. ஆசிரியர் காட்டும் உவமைகள் இரண்டொன்று காட்டுதும்.

இடும்பன் துட்டர்களால் வருத்தமுற்றுச் சரண்புகுந்த வேளாளர்களை நோக்கி உவமை முகத்தால் ஆறுதல் கூறுகின்றார். அவ்வுவமை,

> "அருகுக்குக் கேடே அடுப்பதில்லை தின்னும்
> மிருகத்தின் கேடே மிகுப்பதன்றி" என்பது.

இவ்வடிகளில் வரும் அறுகு என்பது ஓழுந்த கொழுக்கட்டை முதலிய ஏனைய புல்லினங்களையும் கொள்ள நின்றது. "ஒரு

மொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே" என்பது நன்னூல் இலக்கணமாதலின். மிருகம் என்பது ஆடு மாடு எருமை முதலிய புல்தின்னும் மிருகங்களின் பொதுப்பெயராம்.

மிருகங்கள் புல்லைத்தின்று அவற்றிற்குக் கேடு செய்யும். ஆனால் புல் அழிவதில்லை. தின்ற மிருகங்களே அழிவுறுகின்றன. அதுபோல துட்டர்கள் உங்களுக்குக் கேடு செய்கிறார்கள். ஆனால் நீங்கள் கேடடைய மாட்டீர்கள். கேடு செய்யும் அவர்களே அழிவார்கள் என்பது அவ்வுவமையால் உணர்த்தப்பெறும் பிறிது பொருளாம். இவ்வாறு வருவதனை அணியிலக்கண நூலார் ஒட்டு அல்லது பிறிது மொழிதலணி என்பார்கள்.

ஆசிரியர் முருகப் பெருமானுடைய ஆணைக்குத் திருமாலின் கைத் திகிரியாகிய சக்கரத்தை உவமை கூறியிருக்கிறார். திகிரி திருமால் எண்ணிய இடங்களிற்சென்று அவர் கருத்தை முற்று விப்பது முருகனின் ஆணையும் திருமாலின் கைத்திகிரி போல உலக முழுவதிலும் சென்று அவர் திருவுளக்கருத்தை முற்று விப்பது ஆதலின் திகிரியை உவமை கூறினார்.

பதினான்காம் நூற்றாண்டில் வழக்கில் உள்ளனவாய் பிற்கா லத்தில் வழக்கில் உள்ளனவும் இல்லனவுமாகிய ஏனங்களின் பெயர்கள் நில அளவைப் பெயர்கள், பல வகை வரிகளின் பெயர் கள், தண்டனைகளின் பெயர்கள் ஆகியவைகள் இந்நூலின்கண் விரவிவருதல் அறிதற்குரியது.

இந்நூல் முழுவதும் பெரும்பாலும் உலக வழக்கு மொழி களும் சிறுபான்மை நூல் வழக்கு மொழிகளும் பயின்றுவர இயற்றப்பெற்றுள்ளது. ஆதலின் சிறிது கல்வியறிவுடையவரும் விரும்பியறிதற்குரிய எளிமையுடையது. நான்காம் வருணத்தவ ராகிய உழவுதொழில் செய்யும் வேளாளர்பற்றிக் கூறும் வரலாற் றுச் செய்திகளுக்கும், கர்னபரம்பரைச் செய்திகளுக்கும் உலக வழக்கிற்கும் ஒத்துவருவது இந்நூலொன்றேயாம். இது சிறந்த யாப்புறவமைந்த நூலன்றாயினும் இந்நூலின்கண் உழவுக்கலை பற்றிய செய்திகளும், வரலாற்றுண்மைகளும் புராணத்தின் தொன்மையும் அமைந்து கிடக்கின்றன. உழவுக்கலைபற்றிய பழந்தமிழ்ச் சொற்கள் பல விரவியிருத்தலின் இந்நூல் சென்னை அரசாங்கக் கலைச்சொற்குழுவினர் கருத்திற் கொள்ளுதற்குரியது.

இந்நூல் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த வேளாளர் களின் நாகரிகம், பண்பாடு, தொழில் அரசியல் முதலியவற்றை அறிந்துகொள்வதற்குச் சென்ற கால தரிசனம் காட்டும் தூரதரிசனி

போன்றது. இது நாடகவகையைச சேர்ந்த நூலன்றாயினும் நாடக மேடைகளில் நடித்துக் காட்டுதற்கும், நிழற்படக்காட்சி எடுப்பதற்கும் ஏற்ற வரலாற்றுக் கட்டுக்கோப்பு உடையது. தமிழ் நிலத்து வாழ்ந்த முன்னோர்களின் வரலாறும் கருத்துக்களும் மிகவும் உயர்ந்தவை. விலை மதிக்க முடியாதவை. அவைகளே பின்னோர்களின் வாழ்வைச் சிறப்புற வளம்படுத்துபவை. ஆதலின் அவற்றுள் ஒரு சிறு துண்டும் வீணாகாதபடி பாதுகாத்தல் தமிழ் மக்கள் கடமையாம்.

பண்டைய கலை, நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கம் ஆகியவற்றை அறிவதற்கு இத்தகைய நூல்கள் சிறந்த பயன்தரும் என்று கருதி இந்நூலை வெளியிடும் முயற்சியை மேற்கொண்டேன்

மேழி விளக்க நூலின் பதிப்பிற்கு மூலமாயுள்ள ஏட்டுச் சுவடிகள் இரண்டு. அவற்றுள் ஒன்று வீராட்சிமங்கலம் தமிழ்ப் புலவரும், பிங்கலந்தை உரிச்சொல் என்னும் நிகண்டுகளின் பழம் பதிப்பாசிரியருமான வித்துவான் சிவன் பிள்ளையவர்களின் ஏட்டுச் சுவடி.

அதனையும் பிற ஏட்டுச்சுவடிகளையும் பாதுகாத்து வைத்திருந்து என்னை வரவழைத்து அன்புடன் உதவியவர் உடுமலைப் பேட்டை வட்டத்தைச் சேர்ந்த பொம்மநாயக்கன்பட்டி வைத்தியர் திருவாளர் மாணிக்கம் பிள்ளையவர்கள் ஆவார்கள்.

இந்நூலின் பரிசோதனைக்குக் கருவியாகுமாறு தாம் அரிதிற் பாதுகாத்து வைத்திருந்த மேழி விளக்க நூலின் மற்றொரு ஏட்டுச் சுவடியை அன்புடன் கொடுத்து உதவியவர் அவிநாசி வட்டத்தைச் சேர்ந்த கெட்டிசேயூர் சைவத்திருவாளர் ஆறுமுக தேசிகர் அவர்கள் ஆவார்கள். அவ்விருவருடைய நன்றியும் என்னால் யாண்டும் மறக்கற் பாலதன்று.

யான், இந்நூலைப் பரிசோதித்துப் படிப்போர்க்கு உபயோகமாகுமாறு குறிப்புரையும் சென்னிமலைத் தல வரலாற்றுச் சுருக்கமும் நூலின் உட்பொருட் சுருக்கமும் எழுதிச் சேர்த்துள்ளேன்.

'முனிவரு மன்னரு முன்னுவ பொன்னுன் முடியும்' என்று மாணிக்க வாசகப் பெருமான் திருச்சிற்றம்பலக் கோவையிற் கூறியபடி யான் கருதிய இந்நூற்பதிப்பு நிறைவுறுதற்கு வேண்டும் பொருள்களை அன்புடன் கொடுத்துதவிய கொடைப்பண்பு வாய்ந்த அன்புமிக்க நண்பர்களுக்கு இம்மை மறுமைக்குரிய

எல்லா நன்மைகளையும் மேலும் மேலும் தந்தருளுமாறு சென்னி மலையாண்டவன் திருவடிச் செம்பொற்றாமரை மலர்களைச் சிந்தித்து வந்திப்ப தல்லாது வேறு யாது செய்ய வல்லேன்.

இந்நூலைப் பரிசோதனை செய்து அச்சியற்றும்வரை நிழல் போல என்னுடனிருந்து பலவகையில் உதவி புரிந்துவந்த என் அன்புக்குரிய மாணவராகிய வித்துவான் செ. இராசுவிற்கு நீண்ட வாழ்நாளும் நிறைவுறு செல்வமும் நல்ல பதவியும் தந்தருளுமாறு தமிழ்த் தெய்வத்தின் திருவருளைச் சிந்தித்து வந்திக்கிறேன்.

இந்நூல் விரைவில் நல்ல முறையில் வெளிவருவதற்கான சமயமறிந்து பதிப்பித்துதவிய ஈரோடு தமிழன் அச்சகத்தார்க்கு என் நன்றி யாண்டும் உரியதாகுக.

சென்னிமலையின் நிழற்படம் கொடுத்துதவிய சென்னிமலை தேவஸ்தான போர்டார் அவர்களுக்கு மனமுவந்த நன்றி உரியதாகுக.

அடியேன் தேடிவைத்த ஏனைய ஏட்டுச்சுவடிகளும் நூல் வடிவில் வெளிவருவதற்குத் தமிழ்த் தெய்வம் துணை புரிவதாகுக.

வித்துவான்,

**வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்,**

வேலம்பாளையம் (அஞ்சல்)

எழுமாத்தூர் (வழி)

ஈரோடு தாலுக்கா.

*21—5—1963.*

# சென்னிமலை

சென்னிமலை கொங்கு நாட்டில் உள்ள முருகனுக்குரிய குன்றுதோறுடல் திருமலைகளில் ஒன்றாம். இது கொங்கில் பூந்துறை நாட்டைச் சார்ந்து விளங்குவது. மேருமலையின் கொடுமுடிகளில் ஒன்றே சென்னிமலையாம் என்பது தல வரலாறு. இம்மலைமேல் முருகர் இளமைக்கோலம் பொலிய அடியவர்களுக்கு இம்மை மறுமைப் பயன்களைத் தந்தருளுகின்றார். உத்தண்டவேலர் முத்துக்குமரன் என்பன இப்பெருமானுடைய திருநாமங்கள். புட்பகிரி சிரகிரி சிகரகிரி என்பன இம்மலையின் வேறு பெயர்கள். பச்சி தீர்த்தம், மாமாங்க தீர்த்தம், நிருதி தீர்த்தம், சரவணப் பொய்கை முதலியன இத்தலத்திற்குரிய தீர்த்தங்கள். இத்தலத்தில் முருகனைப் பூசித்துப் பேறுபெற்றோர் இடும்பன் சத்தி முனிவர் சரவண முனிவர் மார்க்கண்டேயர் முசுகுந்தச்சோழன் பிண்ணாக்குச் சித்தர் முதலியோர். இம்மலையையடுத்துள்ள நகரம் கமலாலயம் காளிநகர் * திருவிருந்தைநகர் எனப் பெயர் பெறும். மலைகாவலனாகி இம்மலையின் முதற்படியில் வீற்றிருப்பவன் இடும்பன். அவன் முதற்பூசை பெற்று விளங்குபவன். இடும்பன் காவடியில் ஓர் தட்டில் முருகப்பெருமானையும் மற்றொரு தட்டில் வள்ளி தெய்வயானையாரையும் எடுத்துப் பின் பூமியில் வைத்து வழிபட்டனன்.

"குமரனெனுஞ் சென்னிமலைக் குன்றிலுறை வேலவர்பால்

அமருதெய்வ யானைவள்ளி யம்மையுடன்—சமநிறையாய்

காவடியில் வைத்தெடுத்த கடம்பனிடும் பக்குமரா" 41-42

"கோழிக், கொடியுடையோன் றன்னையொரு குன்றோ

டெடுத்திந்தப்

படியில்வைத்த காளிப் பதியிடும்பா" 276-277

(மேழி விளக்கம்)

தேவாசுரப் போரில் சூரபன்மன் முதலிய அசுரர்களெல்லாரும் அழிந்த பிறகு அசுரர்களுக்கு வில்வித்தை பயிற்றுவித்துக்கொண்டிருந்த இடும்பன் என்னும் அசுரன் மறைந்து சென்று அகத்திய முனிவருடைய சீடனாய் இமயமலையையடுத்துள்ள பூர்ச்சை வனத்

---

* இருந்தை—கரிநிறமுடையவள்; காளி. திருவிருந்தைப்பிராட்டி என்பது அத்தலத்து அம்மனின் திருநாமம்.

தில் வாழ்ந்தனன். அம்முனிவர் கட்டளையின்படி அவ்வனத்தி லிருந்த சத்திகிரி சிவகிரிகளை எடுத்துக்கொண்டு திருவாவினன் குடிக்குப் புறப்பட்டு வந்தான். வழியிலுள்ள சென்னிமலையை யடைந்து திசை தெரியாமல் திகைத்தான். இம்மயக்கத்திற்குக் காரணம் இம்மலையே யென்று கோபித்துச் சென்னிமலையையும், மலைமேல் முருகரையும், வள்ளி தெய்வயானையாரையும் காவடியில் சமநிறையாய் வைத்துத் தூக்கினன். முருகப்பெருமான் வெளிப் பட்டுத் திருவாவினன் குடிக்கு வழிகாட்டவும் முருகப்பெருமானை யும், வள்ளி தெய்வயானையாரையும் மலையுடன் அத்தலத்தில் வைத்து வழிபட்டுத் திருவாவினன் குடிக்குச் சென்றான் என்பது தல வரலாறு.

இத்தலத்தில் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதருக்கு முருகப் பெருமான் படியில் பொற்காசளித்தனர்.

"நாட்டி லருணகிரிநாதன் திருப்புகழ்சொல்லப்
பாட்டின் மகிழ்ந்து படிக்காசளித்தபிரான்" (காதல் 56)

மற்றும் கையாத எட்டி, மெய்காணுச்சுனை முதலிய மகிமை களையுடையது இம்மலை. தைப்பூசத் தேர்த்திருவிழா இத்தலத் தில் மிகவும் சிறப்பானது. தலபுராணமும் காதல் பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களும் இத்தலத்திற்குள்ளன. இத்தலம் சோழ மன்னர் முதலியோரால் திருப்பணி செய்யப்பெற்றது.

சென்னிமலையாண்டவர் திருவருளுக்கு உரியவர்களாய் இத் தலத்தில் வாழ்ந்து மலைமீதும் அடிவாரத்திலும் பல திருப்பணி களைச் செய்து முருகப்பெருமான் திருவருளிற் கலந்தவர்கள் செங்கத்துறைப் பூசாரி, வேட்டுவபாளையம் பூசாரி என்னும் மகிமைமிக்க பெரியார்கள்.

**சென்னிமலை** :— ஈரோட்டிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் வழியிலுள்ள ஈங்கூர் ரயில்வே நிலையத்திலிருந்து தெற்கே 4 கல் தொலைவிலுள்ளது.

# நூலின் உட்பொருட்சுருக்கம்.

பூந்துறை நாட்டின்கண் மகிமையுற்று விளங்கும் சென்னிமலை முருகன் திருவருளால் பிறந்தவன் தேர்ச்சோழன் அவனுக்குரிய சோழ நாட்டில் காவிரியாற்றின் கரையருகே விளங்கும் திருமலையையுடையதாய் விளங்குவது திருவிளங்குநாடு அந்நாட்டின்கண் உள்ள பேரூராய் விளங்குவது திருவெண்காடு என்னும் திருத்தலம். அவ்வூரில் வாழும் கார்காத்த வேளாளர் குலத்துப் பிறந்த தெய்வநாயகன் என்பவரது திருப்புதல்வராய்த் தோன்றியவர் 'சரவணையா' என்பவர். அவர் தமிழகத்தில் விளங்கும் சென்னிமலையாண்டவர் திருவருளால் 'மேழி விளக்கம்' என்னும் வேளாளர் வரலாற்று நூலைப்பாடுகின்றார்.

தமிழ்நாட்டைத் தொன்மை தொடங்கி நீதியை உயிராய்க் கொண்டு ஆட்சிபுரிந்துவந்த முடிமன்னர்களாகிய சேர சோழ பாண்டியரென்னும் மூவேந்தர்களின் ஆட்சி குன்றிய பின்பு, கொடுங்கோலர்களாகிய துட்டர்கள் பலர் ஆட்சியைக் கைப்பற்றித் தமிழகத்தில் பல அக்கிரமங்கள் செய்து வந்தனர். அதனால் அந்தணர் முதலிய தமிழ்நில மக்கள் அனைவரும் தத்தம் நியமங்களையும், தொழில்களையும் கைவிட்டலைவாராயினர். அப்பொழுது தமிழ் மண்டிலத்தில் வாழும் வேளாளர்கள் யாவரும் ஒன்று கூடிப் பூந்துறை நாட்டின்கண் விளங்கும் சென்னிமலை வடவாயிற் கோபுர மண்டபத்தின்கண் விளங்கும் காளிப்பதி இடும்பக்குமரன் சந்நிதியை யடைந்து அவன் திருவடிகளை வணங்கி நின்று நாங்கள் அடைந்த துன்பத்தைக் கேட்பாய் என்று நவில்வாராயினர்.

முன்பு எங்கள் பெரியோர்கள் பெற்றிருந்த சிறப்பும் அவர்கள் படைத்திருந்த பொருள்களும், சொல்லுதற்கியலாத அளவினையுடையனவாகும். அவர்கள் தேடிவைத்திருந்த உழவு கருவிகளும், மற்றும் வீடு காடுகளில் வழங்குதலுற்ற பலவகை யேனங்களும் உயிர்ப்பொருள்களாகிய மாடு, எருமை, குதிரை முதலியவைகளும் பெற்று நிலத்தை உழுது பயிர் செய்து காமாட்சியம்மன் கருணையினால் மைசூர் மலையாளம் முதலிய நாடுகளில் நலமுற வாழ்ந்துவந்தோம். அக்காலத்து அரசர்கள் நீதியுடன் ஆட்சிபுரிந்து குறைந்த வரி வாங்கினர். நாங்கள் மகிழ்ச்சியுடன் நன்செய் புன்செய் நிலங்களில் பலவகையான விளைச்சல்களைச் செய்து வேந்தர்களினும் வேளாளரே சிறந்தவர் என்னும்படி பலவகையான அறங்களைச் செய்தோம். எங்கள் குலத்து முன்னோர்கள் பெற்றிருந்த கீர்த்திகள் பலவாகும். வேந்தருக்கு

வேளாளர்களாகிய நாங்கள் இன்றியமையாதவர்களாய் வாழ்ந்தோம்.

மூவேந்தருக்குப் பின்னர் வந்த அரசர்களுக்கு முன்னோடிகளாய்த் திரிந்த துட்டர் பலர் அதிகாரங்களைப் பெற்று அரசர்களாகிக் கொடுங்கோலாட்சி புரிந்து தாங்கமுடியாத பலவகையான வரிச்சுமைகளை யேற்றி மக்களைத் துன்புறுத்தினர். அதனால் நாட்டில் வாழ்ந்த பலவகையான மக்களும் கடுவரி கொடுக்க இயலாதவர்களாய்த் தம்மிடமுள்ள தொழில் செய்து பிழைத்தற்குரிய கருவிகளையும் விற்றுக் கொடுத்தனர். பலவகையான தண்டங்களுக்கும் உள்ளாயினர். கொள்ளை கொலைகளும் மிகுந்தன. மக்கள் தம்தம் தொழில்களைக் கைவிட்டுத் திரிந்தனர். வேளாளர்களாகிய நாங்கள் எங்களுக்குரிய ஏர், நிலம் முதலிய எல்லாவற்றையும் இழந்து, பஞ்சைகளாய் ஊர்தோறும் இரந்து பசிக்குப் பழங்கஞ்சியும் கிட்டாமல் வருத்தமுற்றுப் பலரிடம் நாடித்திரிந்தும் பலனொன்றுமின்மையால், வேலவனையன்றி வேறு துணையில்லையென்று இடும்பக்குமரா இங்குவந்தடைந்தோம். எங்களைக் காப்பாற்றியருளவேண்டும் என்று சொல்லிப்பணிந்தெழுந்தார்கள். இடும்பன், வேளாளர்களே அஞ்சாதிருங்கள். அறுகுக்குக் கேடில்லை. அதனைத் தின்னும் மிருகத்திற்கே கேடுண்டு. உங்களுக்குக் கேடுவராது. உங்களுக்குத் துன்பம் செய்த துட்டர்களே அழிவார்கள். நீங்கள் சலித்தால் நிலம் சலிக்கும். உயிர்கள் அழியும். ஆதியில் நீங்கள் இவ்வுலகம் காப்பதற்கு வந்தவர்கள். நீங்கள் வந்த வரலாற்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஆதியில் சிவனுக்குக் கங்கையினிடமாக வேளாளன், வேளாள நாச்சி என்பவர்கள் தோன்றினார்கள். வேளாளன் கலைகளைத் தும் பயின்று இமயமலைச் சாரலில் இருந்தான். திருமாலுக்குப் பூமிதேவியினிடமாகத் தோன்றியவர்கள் காராளன் காராள நாச்சி என்பவர்கள். காராளன் கலைப்பயிற்சியிற் சிறந்து துட்டர்களை யடக்கிப் பூமியையாண்டிருந்தான். ஒரு நாள் இமயமலைச்சாரலில் பூக்கொய்து கொண்டிருந்த ஊர்வசியைத் தூக்கிக்கொண்டுசென்ற அசுரன் ஒருவனுடன் ஊர்வசியைக் காப்பாற்றும் பொருட்டுக் காராளன் போர் செய்து கொண்டிருந்தான். போர்த்தொனியைக் கேட்ட வேளாளன் ஆயுதமேந்திப் போர்க்களத்திற்கு வந்தான். காராளன் மைத்துனனாகிய வேளாளனைக் கண்டு மிகவும் மகிழ்ந்தான். இரண்டு பேரும் சேர்ந்து அசுரனுடன் போர் புரிந்து முடிவில் அசுரனைக் கொன்றார்கள். அதனைக்கண்ட தேவர் முதலிய அனைவரும் மகிழ்ந்தனர்.

பின்பு சிவபெருமானும் திருமாலும் கங்கையின் மகளாகிய வேளாள நாச்சியைக் காராள மன்னனுக்கும் காராள நாச்சியை வேளாள மன்னனுக்கும் மணம் புரிவித்துப் பலவகைச் சீர்வரிசைகள் தந்தனர். (மணமுறை சீர்முறை ஆகியவற்றை நூலிற்கண்டு கொள்க.) பின்னர்ச் சிவனும் திருமாலும் காராளனுக்கும் வேளாளனுக்கும் நீலமலைச் சார்பிலுள்ள நிலங்களையும் மலைகளையும் கொடுத்து மற்றும் காவிரி நதி சூழ்ந்த நிலமும் பட்டாப்பி என்னும் பரவை நதி பிறந்த எட்டாறு சூழ்ந்த நிலமும் ஆகிய எல்லா இடங்களிலும் உங்கள் குடி விளங்குகவென்று வரம் கொடுத்தனர். மற்றும் இந்திரன் முதலாகிய தேவர்களும் பலவகையான சன்மானங்களைச் செய்தனர். வேளாளனும் காராளனும் மற்றும் பல அரசகுல மகளிரை மணந்து புத்திரர்களையும் புத்திரிகளையும் பெற்று வழி வழியாய்ப் பூமியையுழுது நான்கு யுகங்களிலும் நன்றாக வாழ்ந்திருந்தனர்.

கலியுகத்தின் தொடக்கத்தில் தமிழ் வேந்தர்கள் மூவரும் தங்கள் நாட்டில் உழவு செய்யும் வேளாளர்களின்மையால் வளம் குன்றி வறுமையால் வாட்டமுற்று வேளாளர்களையழைத்துவர அவர்கள் வாழும் மும்மண்டலத்திற்குமுரிய நீலமலைச்சாரலை யடைந்து அங்கு வாழும் வேளாளர் தலைவனைக் கண்டு அவனால் உபசரிக்கப்பட்டுச் சேனைகளுடன் விருந்து செய்விக்கப்பெற்றனர். பின்பு மூவரும் வேளாளகுலத் தலைவனைப்புகழ்ந்து கங்காகுலத் தரசே காராள மன்னவனே எங்கள் நாட்டில் உழவு செய்யும் வேளாளர்கள் இல்லாமையால் உணவுப்பொருள் வளம்குன்ற வறுமையால் வாட்டமுற்றோம். ஆதலால் உங்களையழைத்துக் கொண்டு போவதற்கு வந்தோம். குடியரசர்களாகிய நீங்களே எங்கள் முடியரசினை விளங்கச் செய்யவேண்டும். நீங்கள் ஆறில் ஒன்று கொடுத்தாற்போதும். வேறொன்றும் கொடுக்கவேண்டியதில்லை. நாங்கள் உங்களைச் சரியாசனம் தந்து மரியாதையாக வைத்திருப்போம். நீங்கள் எங்கள் நாட்டிற்கு வரவேண்டும் என்று வேண்டினர். வேளாளரும் காராளரும் வேந்தர்களுடைய வேண்டுகோளை யேற்றனர். மூவேந்தர்களும் மனமுவந்து வேளாளர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு சோழநாட்டிற்கு வந்து காஞ்சிபுரத்திற் காமாட்சியை வணங்கி வேளாளருக்கு விருந்து செய்வித்தனர். பின்பு முடிமன்னர் மூவரும் வேளாளர்களைக் குளித்தலைக்கு அழைத்துக்கொண்டு வந்து காவிரியில் மூழ்கி ஆங்குள்ள செல்லியம்மன் முன்பு நாற்பத்தெண்ணாயிரம் குடிமக்களையும் கொங்கர் சோழர் பாண்டியரென மூன்று வகையாகக் குடிப்பிரிவு செய்து அவர்களுள்ளும் உழவு செய்யும் பசுங்குடிகள் பன்னீராயிரமெனப் பிரித்துத் தத்தம் நாட்டிற் குடியேற்றினர். வேளாளர்கள் உழவு தொழிலால்

வள்ம் பெருக்கி நாட்டையும் அரசரையும் வளமுறச் செய்தனர். கொங்குமண்டல வேளாளர்களின் வழியிலே பலவகை வேளாளர்கள் தோன்றினர்கள்.

சக்கரவர்த்திச் சோழனுக்குக் காராள்குலக் கன்னிகையினிடமாகப் பிறந்தவர்கள் தொண்டைமண்டலத்து வேளாளர்களின் மரபுரிமை பெற்றுத்தாமும் தொண்டைமண்டல வேளாளரெனச் சிறப்பெய்தினர்.

பாண்டியனுக்கும் இந்திரனுக்கும் நிகழ்ந்த போரிலே இந்திரன் தோல்வியுற்றுத் தன் வாகனமாகிய மேகத்தைப் பூமியில் விட்டு வானத்தையடைந்தான். பாண்டியன் தளைபூட்டி மேகத்தைச் சிறைசெய்தான். பாண்டிய வேளாளர் சிலர் மேகத்தைச் சிறைவிடுமாறு பாண்டியனை வேண்டவும் பாண்டியன் வேறு பிணைவேண்டுமென்றனன். பாண்டி நாட்டு வேளாளர் வேண்டுகோளின்படி சோழநாட்டு வேளாளர்களிற் சிலர் பாண்டியனிடம் பிணையேற்று மேகத்தைச் சிறையினின்றும் விடுவித்துக் கார்காத்த வேளாளரெனப் பெயர் பெற்றனர். அவர்களுக்குரியநாடு சோழநாட்டிலுள்ள மகதமண்டலம். (பாண்டியனிடம் முதலில் மேகத்தைச் சிறைவிடுமாறு வேண்டிய பாண்டிமண்டல வேளாளரிற் சிலரும் கார்காத்த வேளாளரெனப் பெறுவர்.)

இந்த ஐவகை வேளாளர்களின் வழியாகத் தோன்றிய வேளாளர் பலராவர். அவர்கள் பலவகையாய்ப் பிரிந்து பல இடங்களிலும் குடியேறி குலம் கோத்திரம் கொண்டு கொடுத்தல் பேசும் மொழி ஆகியவற்றில் வேறுபாடுடையராய்ப் பயிர்த்தொழில் செய்து உலகினரை வாழ்வித்து நாட்டில் நல்லரசு சிறக்கும்படி நல்வாழ்வு வாழ்ந்தனர். வேளாளர்களே உங்கள் வரலாறு இதுவாகும். கவலையை விடுங்கள் என்று சொல்லி இடும்பன் வேளாளர்களைச் சென்னிமலைமேல் வீற்றிருக்கும் செவ்வேளின் முன்பு அழைத்துக்கொண்டு சென்று முருகப்பெருமானை வணங்கி வேளாளர்களின் குறைகளை முருகப்பெருமானுக்கு எடுத்துச் சொல்லி சென்னிமலைக்குமரா உன் திருவடிகளை மறவாத வேளாளர்களாகிய இவர்களைப் பாதுகாத்தருளவேண்டுமென்று வேளாளர்களுடன் முருகப்பெருமான் திருவடிகளைத் தொழுது நின்றான். முருகப்பெருமான் வேளாளர்களின் குறைகளைக் கேட்டு மனமிரங்கிப் பூமி பாலகர்களுக்குப் பொல்லாதவராயிருந்து நன்றி மறந்து நாட்டிலில்லா வரியையுண்டுசெய்த பாதகர்களையழியும்படி செய்து வேளாளர்களை நோக்கித் துட்டர்களையழித்தோம். வேளாளர்களே நீங்கள் நீதிநெறியுடன் சாதிமரபு தவறாமல் சகல

கலேகளேயும் ஆராய்ந்து தவப்பேறுடனே நல்வாழ்வுற்றுப் பூமியை யாண்டிருங்களென்று வரங்கொடுத்தருளினர். வேளாளர்கள் முருகப்பெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு பூந்துறை நாட்டினின்றும் பிரிந்து தத்தம் நாடடைந்தார்கள். நாட்டில் நல்ல மழை பெய்தமையால் வேளாளர்கள் நெல் முதலிய பலவகை விளேச்சல்களேயுண்டாக்கிச் சிறப்புடன் பூமியைப் பாதுகாத்து வாழ்ந்தனர்.

---

**மேழி விளக்கப் பதிப்பிற்கு நன்கொடை வழங்கியவாகள் :—**

எழுமாத்தூர் சத்திநாதர் கோயில் திருக்கூட்டத்து அன்பர்கள்.

திரு. S. P சுப்பராயக் கவுண்டர் அவர்கள்
சிலம்ப கவுண்டன்பாளேயம், மொடக்குறிச்சி.

திரு. குழந்தசாமிக் கவுண்டர் அவர்கள்.
ஜெயராமபுரம் (வாழைத்தோட்டத்து வலசு)

கொங்கணுபுரம் ஜமீன்தார் திரு. K. R. நாச்சியப்ப கவுண்டர் அவர்கள்.

திருமதி S. சின்னம்மாள் அவர்கள், ஜமீன்தாரிணி
(திருச்செங்கோடு) பாளேயந்தோட்டம்,
வைகைப் பொன்மலே.

காட்டூர் திரு. ந. சுந்தரம் அவர்கள்.

திரு. V. M. கைலாசம் அவர்கள், ஈரோடு.

திரு. V. S. இராமலிங்கக் கவுண்டர் அவர்கள், வட்டக்கல் வலசு.

ஆயப்பரப்பு மணியகாரர் திரு. இராமலிங்கக் கவுண்டர்.

# மேழி விளக்கம்

என்னும்

# வேளாளர் வரலாற்று நூல்.

---

### காப்பு.

வேளாளர் மேழி விளக்கத்தை மேதினியில்
நாளும் விளங்கவே நான்பாட — ஆளுகின்ற
வேழம் அவல்பயறு வெண்பொரி யும்வேண்டும்
வேழ முகவன் துணை (1)

### அவையடக்கம்.

மூற்கதையை நானறியேன் முத்தமிழின் சீரறியேன்
சொற்கதை மேழிவளம் சொல்கின்றேன் — இக்கதையை
என்னிற் சிறியோர் இகழ்வார்கள் இப்பாடல்
என்னிற் பெரியோ ரிகழார். (2)

செந்தமிழ்கற் றோர்முன் சிறியேன் சரவணன்நான்
இந்தக் கதையை இயம்பினேன் — அந்தகனுங்
கண்ணுள் ளவர்க்குவழி காட்டினது போலுமெனச்
சொன்ன தமிழுலகிற் சொல். (3)

### அவையடக்க முகத்தால் வரலாறு கூறுதல்.

காராளர் தம்முறைகேட் டிடுப்ப ணுருங்
கங்கைகுலத் தார்பிறந்த கதையைச் சொல்லி
பாரீன்ற மன்னவரே அஞ்சல் என்று
பசுந்தோகை மயில்முருகர் பாதம் போற்றி
ஏராளர் துயரகற்றிப் பவிசு நல்கி
எழுபத்தொன் பதுநாட்டார் எல்லா ருக்கும்
சீரான செல்வமொடு வரங்கள் தந்த
செயன்மேழி வளப்பெருமை செப்பு வேனே! (4)

---

1. வேழம்—கரும்பு, யானை.
4. கங்கைகுலம்—வேளாளர் குலம்.

காளிநகர்ப் பதியிலெம்பன் உரைத்த காதை
    கவிவாணன் சென்னிமலைக் கந்தன் முன்பால்
மேழிவளம் உற்பவித்த குலமும், சீரும்
    மேதினியிற் படைத்தேனம் விரித்துச் சொல்லி
ஆழியலை சூழுலகிற் சந்திரா தித்தா
    ஆளுகின்ற உலகாமிவ் வவனி மீதில்
வாழுமென முருகர்சொல்லிச் செல்வம் தந்த
    வயனமெல்லாம் செந்தமிழால் வழுத்து வேனே! (5)

பாயிரம் முற்றும்.

5. காளிநகர்—சென்னிமலையை அடுத்துள்ள ஊர். பிடாரியூர் என்பாரும் உளர்.

# நூல்

## சென்னிமலையாண்டவர் சிறப்பு

சீர்பூத்த செங்கமலத் தேனுர் பசுந்துளவ
நார்பூத்த வேத னருளாலே—ஏர்பூத்த 1

மாமேரிற் சேடனொடு வாயுபக வானெதிர்த்துத்
தாமோதி மூன்றுமுடி தான்பறித்துப்—போமளவில் 2

அன்று விழுந்தகிரி யாமெனவே சொல்கின்ற
மன்றதனிற் சென்னி மலையுடையான்—தெண்டிரைசூழ் 3

கட்டாணி முத்திகுளக் கணவாய்க் கொடியதன்மேல்
எட்டிவிழுந் தம்மலையி லேபெருகி—முட்டமெனும் 4

குன்றின் வழியாய்க் குலையத்திற் காஞ்சிநதி
என்றநொய்ய லாறுடைய எம்பெருமான்—மன்றதனிற் 5

திந்திருணி மாவரசு தேங்கமுகு வாழைபலா
வந்துகுலை சாய்ந்து மடல்விரிந்து—சிந்தினதால் 6

பாய்ந்தரச மொடுபெருகி வயலதனிற் செந்நெல்விளை
பூந்துறைசெய் நாடெனனும் புகழுடையான்—பாந்தளணிக் 7

சூரிய கயிலாயத் துற்றசிவ னார்பாகம்
பிரியாத பெண்பெரிய நாயகியாள்—அருளாலே 8

வேதியர்கள் சாலைகளும் வேந்தர் அரண்மனையும்
சாதி வைசியர்கடை சத்திரமும்—பூதலத்தில் 9

வேளாளர் மாளிகையும் மேடைமதிற் கோபுரமும்
வாளாணிச் சேனை மாகயமும்—நாள்தோறும் 10

தேருதிரு நாள்விளங்கிச் செல்வமுள காளிபதி
யூரில் வளருமெங்கள் உத்தமனும்—காருமழை 11

---

4 முத்திகுளம் முட்டமெனும் குன்று—இவை யிரண்டும் வெள்ளி யங்கிரி மலையில் உள்ளன.
கட்டாணி—உறுதியான ஆணிமுத்து.

5. "மீ கொங்கில் அணிகாஞ்சி" (சுந்தரர் தேவாரம்)

6. திந்திருணி—புளியமரம்

7. பாந்தள்—பாம்பு.

8. தலத்து அம்மனுக்குரிய திருநாமம்.

10. மா—குதிரை; கயம்—யானை; வாளாணி—வாட்போர் செய்யும் உறுதியான காலாட்படை வீரர்.

மேகத்தி னூடுசெலும் விண்சலதி யையுறிஞ்சித்
தாகம் தணிந்துவரும் தந்தியுளோன்—வேகமுடன் 12

அண்ட முகடெல்லாம் அடைவாய் ஒருநொடியில்
துண்டர்களை ஓட்டும் தோகைப்பரியோன்—கண்டசுரர் 13

ஆழிக் கடலில் அழுந்த விழுந்தசெழுங்
கோழிக் கொடியுடைய கொற்றவனும்—கூளிகண 14

பட்சணத்துக் காயசுரர் பட்டுவிழக் கொன்றுவெற்றி
வெட்சிமலர் மாலைபுனை வேலவனும்—செச்சைபுனை 15

இந்திரனுந் தேவர்களும் இருந்த சிறைதவிர்த்து
வந்துதவி செய்த வடிமுரசோன்—நந்தன்மனை 16

தன்னில் வளர்கண்ணன் தரித்த திகிரியைப்போல்
எண்ணவரும் ஆணையிடும் எம்பெருமான்—மண்ணுலகிற் 17

காணுச் சுனையும் கருநொச்சி கல்லதன்மேல்
தோணுத புள்ளுருவிச் சூட்சிகளும்—நாணுத 18

சிங்கமொடு யானைபுலி சேவெருதும் ஓர்துறையில்
தங்கள் பகையின்றித் தரிப்பதுவும்—பொங்குநதி 19

மாமாங்கப் பொய்கைதெப்ப வாவியுநந் தாவனமும்
தாமக் குழன்மடவார் தன்மையினிற்—காமனொடு 20

கூடி யிருந்துது லாவுதல்போல் அவ்வனத்தில்
பேடைமயில் வெள்ளைப்பு ருவினமும்—மாடமதில் 21

---

12 தந்தி—யானை. சலதி—நீர்.

13. தோகைப்பரி—மயில்.
தோகை—குறுக்கல் விகாரம்.
'செங்கட் பசுந்தோகை வாம்பரி யுகைத்தவன்'
—முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்.

14. கூளிகணம்—பேய்க்கூட்டம்.

15. செச்சை—செச்சைமாலை.

18. புள்ளுருவி—ஒருவகை மூலிகை.
கையாதளட்டி கருநொச்சிவெண்சாரை
மெய்காணுப் பொய்கைசித்தர் மேவுஞ்சிரகிரியான்
சென்னிமலையாண்டவர் காதல் 77.

19. தரித்தல்—தங்குதல்.

20. மாமாங்கப் பொய்கை—சென்னிமலையிலுள்ள ஓர் தீர்த்தம்.
தெப்பவாவி—மார்க்கண்டேய தீர்த்தம் என்பர்.
இதனை அடுத்துள்ள வாவி சரவணப்பொய்கை.

சேவலுட னேயிருக்குஞ் சிங்காரத் தோப்பழகும்
பூவலரும் சண்பகப்பூஞ் சோலைகளும்—தேவுலக 22

மாமெனவே சொல்லும் அளகா புரிக்கிணையாய்
காமன் இரதிவளர் காளிபதி—பூமிசையில் 23

சென்னிமலை மீதிருக்கும் செவ்வேள் முத் துக்குமரன்
தன்னருளால் உற்பவித்துத் தாரணியின்—மன்னனெனுந் 24

தேரூரும் சோழனொடு தேசமதி லேதிருவை
வாரியெனுங் காவேரி மாநதியின்—சீரூரும் 25

திருமலையின் சார்புதனில் திருவிளங்கு நாடதனில்
திருவெண் காடென்னும் திருவூரில்—தருகாரைக் 26

காத்தவே ளாளரிட கனமரபி லேகங்கா
கோத்திரத்தி லேவந்த குலதீபன்—கீர்த்திபெற்ற 27

நற்குலத்து மங்கையரை நாடி மணப்புணர்ந்த
சற்குண மாலான சண்முகவேள்—கெற்பசுதன் 28

சரவணன்சே யாறுமுகன் தனையன் சரவணமால்
அருள்புதல்வ னைதெய்வ நாயகவேள்— தருபாலன் 29

என்பேர் சரவணன்என் றியப்புவார் இப்புவியின்
முன்பு மொழிகதையை மொழிகின்றேன்—தேன்பாயும் 30

சென்னி மலைக்குமரன் செவ்வேள் கிருபையினல்
இந்நிலத்தில் வாழ்ந்தகதை இயப்பவே— பன்னுதமிழ் 31

நாட்டுப் பெரியோரே நாயடியேன் சொன்னகவி
கேட்டு மனமகிழ்வீர் மெச்சிதமாய்ச்—சூட்டுமுடி 32

## வேளாளர்கள் அரசர் கொடுங்கோலுக்கு அஞ்சி சென்னிமலை இடும்பன் முன்பு முறையிடுதல்

பாண்டியனுங் கொங்கர்பிரான் பார்சோழ மாராயன்
மூன்றரசர் காலம் முடிந்தபின்பு—நீண்டபுவி 33

---

23. காளிபதி—திருவிருந்தை நகர்.
24. முத்துக்குமரன்—சென்னிமலை முருகன் திருநாமம்.
25. தேரூருஞ்சோழன்—வண்டிக்காற் சோழன்; கன்றிடர் வீழக் காதலன்றனைத் தேர்க்காலினிற்றந்தவன்.
சென்னிமலைத் தலபுராணம்.
26. திருவெண்காடு—சோழநாட்டுச் சிவத்தலம்
28. சுதன்—புத்திரன்.
33. மூன்றரசர் காலம்—14-ஆம் நூற்றூண்டின் முற்பகுதி.

மண்டலத்தை ஆண்டோர் மணலிற் பெரிதெனவே
துண்டரண வீரர் துரைத்தனத்தில்—அன்றுமுதல் 34

அந்தணரும் சத்திரிய ரானவசி யர்பின்பு
வந்துதித்த சூத்திரரும் மாநிலத்தில்—தந்தம் 35

விதிமுறையும் செய்தொழிலும் விட்டுஇட ருற்றதனால்
நதிபாயும் தொண்டைவள நாட்டாரும்—மதியுலவு 36

சோழநகர் மண்டலமும் சொல்மகத மண்டலமும்
வாழுங் கொங்குபாண்டி மண்டலத்தில்—நாளும் 37

மேழிக் கொடிபடைத்த வேளாளர் எல்லோரும்
காளிப் பதியூர் கருதியே—ஆழிக் 38

கடல்போலே கூடிவந்து கடம்பன் இடும்பனமர்
வடவாசற் கோபுரத்து மண்டபத்தை—அடைவாக 39

சுற்றிவல மாகவந்து தொழுதெழுந்து தோத்திரங்கள்
புத்தியுடன் செய்துநின்று போதமிக—முத்தக் 40

குமரனெனுஞ் சென்னிமலைக் குன்றிலுறை மேவலவர்பால்
அமருதெய்வ யானைவள்ளி யம்மையுடன்—சமநிறையாய் 41

காவடியில் வைத்தெடுத்த கடம்பனிடும் பக்குமரா
பூவுலகில் எங்கள்கலி புகலக்கேள்—ஆவலுடன் 42

எங்கள் பெரியோர் இயல்பும் படைத்தேனச்
சங்கதியெ லாமித் தரணிதனில்—பங்கயனும் 43

---

34. புவிஆண்டோர்—14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முகமதியர். அவருக்குப்பின் 16-17 ஆம் நூற்றாண்டு வரையிலும் விசயநகரத்து நாயகமன்னர் இவர்களுடைய ஆட்சிக்காலங்களில் முறையே முகமதியரிற்சிலரும் சேனைத்தலைவரில் சிலரும் அதிகாரம்பெற்று நாட்டில் நலிவு செய்தனர்.

37. மகதம—தமிழ் மண்டிலத்துள்ள ஒரு தனிநாடு.

39. கடம்பன்—வடவாயிற் கோபுரத்து விளங்கும் கந்தன். அடுத்து விளங்கும் சிவலிங்கப் பெருமானுக்கு கடம்பவனநாதர் என்பது பெயர்.

**41-42.** தலஐதிகம்.

அண்டர்தொழுஞ் சென்னிமலையாண்டவர்க்குப் பூசனைமுன்
கொண்ட இடும்பக்குமரர்பதம் கும்பிடுவோம்.

சென்னிமலையாண்டவர் காதல் 12.

**42.** கலி—துன்பம்.

43. படைத்தேனம்—சம்பாதித்த பொருள்கள்.

சொல்ல முடியாது தொல்லுலகில் மேழியெனும்
வல்ல தொழிலேனம் வழுத்தக்கேள்—நல்ல 44

மரத்தேனங் கொடியேனம் மாற்றிற் கொளுமேனம்
கருத்த இரும்பேனம் கயிற்றேனம்—விரைத்தாளியத் 45

தோலேனம் கல்லேனம் தோன்றுசில மண்ணேனம்
பாலேனம் பண்டம் படைத்தேனம்—மேலான 46

கட்டுக் கிடையேனம் காட்டில் வளர்த்தேனம்
ஓட்டுத் தொகைசற் றுரைக்கக்கேள்—வடடக் 47

## கொடியேனம்

கடல்சூழ்ந்த வையகத்தில் கனதண்டி கைத்துரைகள்
நடைதோர ணக்கொடியை நாட்டிவைப்பார்—அடியேங்கள் 48

படியையுழு தாண்டுநல்ல பயிர்செய்யும் கைத்தொழிலிற்
கொடியேனம் சற்றே கூறக்கேள்—எடுகொடப்பு 49

மக்கிரியும் சாடுகொட்டி வயிற்றாற்றுக் கூடைமுறம்
கைக்கினிய வாய்க்கூடை கட்டுகொடி—மிக்கான 50

வாய்த்தமணற் சல்லாடை வற்பேழை சிப்பிதொம்பை
சாற்றுதற்குக் கூடாது தானையா—போற்றரசர் 51

## மாறேனம்

அளவுகோல் மாறுண் டவர்க்குலகில் எங்கள்
அளவுதொழில் மாறேன மறையக்கேள்—விளைபுனத்திற் 52

பட்டிகட்டு மாறும் பாய்ப்படலின் மாறும்
தட்டி எருதோட்டும் தடிமாறுங்—கட்டுபிடி 53

காலாணிக் காளிமார் கைக்குக் குளுந்தமார்
மேலான மாறுமின்னம் வேணதுண்டு—கோலேனம் 54

## கோலேனம்

வேந்தர்க்குச் செங்கோலாம் வேளாளர் கைக்கோலைப்
பாந்தமுடன் சற்றே பகரக்கேள்—வாய்ந்தமுளை 55

உளைக்கோல் கவைக்கொடுங்கோல் ஊத்தாணிக் கோல்களுடன்
துணைக்கோலுங் கம்பைகொக்கி தூக்குங்கோல் ·முளைக்கோலும் 56

52 மாறு—விளார்.

நெட்டிகழி கைத்தடிக்கோல் கிணற்றிறைக்குஞ் சல்லைக்கோல்
வெட்டுமிரும் பெனத்து முன்பிடிக்கோல்—கட்டுமனை 57

வரிச்சற்கோல் தொட்டாப்பு வன்முனையும் கன்முனையும்
பருப்புமத்துக் கோல்துடுப்புப் பார்கலப்பை—விருப்பமுடன் 58

பருத்திதிறை காறுதற்குப் பாரத்து லாக்கோலும்
உரைத்தகோல் உண்டுமின்னம் உத்தமனே-துரைத்தலத்தில் 59

## மரத்தேனம்

தண்டிகையும் தோமரமும் தார்வேந்தர் தாம்படைத்தார்
மண்டலத்தில் எங்கள் மரத்தேனம்—உண்டுகேள் 60

கலப்பைகரு வத்தடியுங் கைப்பிடிக்கு மேழிநுகம்
கிலைத்தரய்யு தொண்டிகைநீ முற்குடிசை—அலுத்துறங்கும் 61

கட்டில்திரு வாய்க்களியுங் கட்டுமரம் அண்டைகோட்டம்
பட்டடையும் மேழிப்பரண் பண்ணைவண்டி—விட்டம் 62

படுமரம் இரண்டுபிள்ளைப் பண்ணையுதை காலிரண்டு
குடிலுருளை ரண்டுகுத்துக் காலாறு—கிடைமரமுங் 63

தோரணப் பலகைபெரு தொதுங்கா விடுமரமுங்
காரணமா யாவெற்றுக் காலும்வரி—நேரான 64

மின்துண்டு மொக்காணி மிதிமரம் பிடித்தாடி
பின்துண்டு ஆப்புசிறுய் பின்னையுங்கேள்—வன்கத்தி 65

தெப்பு மரத்தடனே செங்கெல் பரம்புமரக்
தொப்பு வசிதொட் டாப்புத்தடி—வாய்ப்பான 66

கருப்புக்கும் ஆலைக் கருதுமச்சுப் பலகையுடன்
இருப்பு குடப்பலகை விகிமரமும்—கருப்பரு 67

மல்லல் அணிபுயனே மரத்தேனம் இன்னமுண்டு
சொல்ல முடியாது தோன்றலே—இல்லகத்தில் 68

விட்டுநெடுங் காலும்வளை விட்டமொடு சட்டமுமாம்
பூட்டுசிக்காற் பலகை போதிகையும்—காட்டுத்தூண் 69

கப்பந் துலாக்கட்டை கதவுநிலை வுத்தராட்சம்
செப்பு குருத்தாணி விகத்தாள்—சப்பிரமாய் 70

---

60. தண்டிகை—பல்லக்கு.
தோமரம்—ஓர் ஆயுதம்.
62. பட்டடை—பட்டரை.
65. மொக்காணி—வண்டியின் மூக்காணி.

அளக்கும்வள் ளம்படியும் ஆன இடியுரலும்
உலக்கைபெட்டி கத்திக்கூ டுங்குமஞ்சம்— உளக்குமுடன் 71

நாற்காலி முக்காலி நல்விளக்குக் கம்பமுடன்
ஏற்கும் அரி வாள்மனையும் இட்டிவட்டம்—சேர்க்கும் 72

சந்தகை மரத்துடனே தறிக்கு நடுமரமும்
டந்தலுக் கேற்ற பனைமரமும்— இந்தவிதம் 73

விரும்புமனை ஏனமின்னம் விள்ள முடியாது
இரும்பேனம் சற்றே இயம்பக்கேள்—வரம்பணியா 74

## இரும்பேனம்

மன்னருக்கு ஆயுதமாம் வாய்த்தஇரும் பேனமுண்டு
இன்னிலத்தில் எங்கள் இரும்பேனம்—தன்னுதொழில் 75

தாறுகொழு ஒண்டிகொத்துச் சருவாணி யுங்கொடுவாள்
கூறுகொழு முட்டிகோ டாலியுடன் — மாறு 76

வெட்டரிவாள் மண்வெட்டி விழையுங் களைக்கொத்து
வட்டப் பரிவளையம் வண்சாலு—முட்டும் 77

உருளைமுளைச் சங்கிலியும் உள்வளையங் கொக்கியுடன்
கருதரையின் கத்தி கடப்பாரை—யும்மெருது 78

விலங்கான சங்கிலியும் வீர மணிக்கிலுக்கும்
கலங்காத் திருகாணி காலாடம்— நலங்காபல் 79

நோய்தீர்க்கும் சூட்டுக்கோல் நுண்புல் உரைவாரி
காய்வெல்லக் கொப்பரையா லேக்கரண்டி—வாயிருக்குப் 80

பாக்குவெட்டி சக்கிமுக்கி பையிற் கரண்டகமும்
மேற்கையா முள்ளிடுக்கி நெட்டூசி—மூக்குக் 81

குத்துதற் கான கோணூசி யும்முதலாய்
வைத்தோம் அநேக வகையேனம்—எத்தனை தான் 82

என்றுரைக்கப் போறேனாம் இல்லில் இரும்பேனம்
உண்டானது சற்று உரைக்கக்கேள்—துண்டுதுண்டாய்க் 83

கட்டுதக டாணிவில்லை கதவு முளையாணி
வட்டவளை முறுக்கு மலர்வெண்டைக்—கெட்டிசெயும் 84

72 இட்டிவட்டம்—மரத்தட்டம்.

81. கரண்டகம்—சுண்ணும்புக்காய்.

நாதாங்கிச் சங்கிலியும் நல்லீகக் கோற்சூரி
வேதாந்தம் ஓதும் எழுத்தாணி—சீதாந்தக் 85

கச்சாயந் தோசைவடை காய்பொரிக்கும் சட்டியுடன்
மெச்சுபணி யாரக்கல் விதவிதமாய்—அச்சழியா 86

வெள்ளம் படிபிடியும் வால்கிண்ணம் பொட்டிமொந்தை
பிள்ளைக்காற் றண்டவளை பேர்வாழி—பள்ளிகொளுந் 87

தூங்குகொக்கிச் சங்கிலியும் தூண்டா விளக்குடனுந்
தேங்காய் துருவியரி வாள்மணையும்—பாங்கா 88

யுலக்கைத்தடிப் பூணுடனே உத்தமனே யின்னம்
இலக்கமில்லை இந்த இரும்பேனம்—நிலத்தினிலே 89

## கல்லேனம்

மாணிக்கம் என்றொருகல் மன்னர் படைத்திருப்பார்
பேணிக் குடித்தனக்கல் பேசக்கேள்—ஆணியுலைக் 90

கூடம் அடிபடுங்கல் கொளுகலப்பை முட்டுங்கல்
மாடுபட்டி நாட்டுக்கல் வன்கவண்கல்—ஆடைவெரும் 91

பாலடுப்புக் கற்றூட்டம் பாத்திமடைக் கல்லுடனும்
மேலுந் துலைக்கல் மிதிகல்லு—மாலையமாம் 92

மல்லாண்டார் பட்டடைக்கல் மாடுமிதி யானடிக்கல்
எல்லோர் சுமைதன்னை ஏந்துங்கல்—இல்லகத்தில் 93

அம்மி குளவியுடன் ஆரியமுன் திரிகைக்கல்
சம்மதி யான சலவைக்கல்—ரம்மிதமாய் 94

ஆட்டுக்கல் லுட்குழவி யனேகமுண்டு கல்லேனம்
நாட்டில் ஒருவர்சொல்ல நாடாது—கேட்டருவீர் 95

## கயிற்றேனம்

அளவுகயி றென்றுண் டரசர்க் கடியேங்கள்
உழவு கயிறெல்லாம் உரைக்கக்கேள்—தளைவுக் 96

கயிற்றே னங்கண்ணி கட்டு பிரிக்கயிறு
தவத்தாற் பெரிய தயிர்க்கயிறு—அவிழ்ந்துதினம் 97

மூலைகட்டுங் கயிறு மொண்டிகட் டுங்கயிறு
காலுக்கண் ணிக்கயிறு கட்டுசந்தி—மேலான 98

கட்டிற் கயிறுடனுங் காலணைக்குங் கயிறும்
தொட்டவடம் வாற்கயிறு துண்டுவடங்—கட்டும் 99

தலைக்கயிறு மூக்கதனில் தரிக்கும் கயிற்றுடனே
வலைக்கயிறு தாம்புகட்டு வண்கயிறு—சிலைக்கயிறு 100

வேணதுண் டின்னம் வினவ முடியாது
ஈனருரி யாரேனம் இயம்பக்கேள்—பூணணியும் 101

## தோலேனம்

முடியரசர் யானையெனும் மும்மதத்தோ லேபடைத்தார்
படிமிசையில் எங்களிட பண்ணையத்துக்—கடுந்தொழிலில் 102

தோலேனம் சுண்டுபரித் தோற்பை துருத்தியுடன்
காலணியும் தொடுதோல் கவண்வாரு—மேலான 103

விகிவார் முகமெட்டு வெள்ளிக்கோற் சேட்டாவுந்
தகையாய்ப் படைத்தவர் தரப்பணிவார்—வகையாகச் 104

சேருமற்றே னங்களின்னஞ் செப்பவென்றால் நாட்செல்லுந்
தாமதில மண்ணேனஞ் சாற்றக்கேள்—நாமமுடன் 105

## மண்ணேனம்

பொன்பாண்ட பேயரசர் பூவுலகி லேபடைத்தார்
மண்பாண்ட நாம்படைத்த வயனங்கேள்— முன்பான 106

விரைக்குட முங்கரகம் வெண்பாலி நற்கலையங்
கரைத்துவிடு தாளிமிடா கைக்கரகப்—பொரியோடு 107

பானைகுண்டுச் சட்டிகுடம் பணியாரம் தோசைவடைக்
கானசட்டி யுட்காலி யாறுகண்—பானையொடு 108

உரிச்சட்டி மேல்மூடி உப்பிருக்கும் சொப்பும்
கரிச்சட்டி பால்வெண்ணெய்க் கானசட்டி—நிரைத்தக்காற் 109

சுண்டுசட்டி காற்சட்டி சொல்ல முடியாது
மண்டலத்தி லேதொடிகை மன்னன்மனை - துண்டுதுண்டாய்க் 110

பள்ளியறை திண்ணை பருத்த நடவையுடன்
உள்ளே சவுக்கைமச் சேரார் களஞ்சியமும்—ஒள்ளிதாய்க் 111

---

111. சவுக்கை—இளைப்பாறுமிடம் (சதுரத் திண்ணைக் கூடம்)
மச்சு—மேற்றளக் கட்டிடம்.

குலுக்கை குருது குழிம்திலுங் கோட்டைகொம்மை
நிலத்தேனம் சொல்லநெடு நாட்செலுமே—பலித்தேனம் 112

**உயிரேனம்**

ஆடுகடாக் குட்டி அநேக வகைகளுண்டு
மாடெருது கன்று வலிசேவும்—சோடாய் 113

உழவுக்கி டாஎருமை யூட்டுக்கண் இந்த
வளவுக்கு வகுக்க மாட்டார்காண்—வளவுதனில் 114

கட்டுக் குதிரையுடன் காட்டில்விடு மட்டமுமாய்
மட்டில்லை இந்தவண் ணைப்புரவி—பட்டிதனிற் 115

காக்கும் சுணங்கினங்கள் காலனிம தூதரைப்போல்
ஆர்க்கும் இடங்கொடா தாண்மையுள்ளோர்—ஏற்கையாய் 116

வீடு குலுக்கைமச்சு மெய்காவ லாயிருக்கும்
நாடா வலியகரி ஞாளியினங்—கூடிலத்தில் 117

எலியும் பெருச்சாளிக் கெதிராளி யாயிருக்கும்
வலிய வெருகினங்கள் மட்டில்லை—கலியுகத்தில் 118

**ஏனங்களின் தொகை**

நிலத்திற் பதிங்தேனம் நீண்ட குடித்தனத்திற்
பலித்த உயிரேனம் பதினாலு—நலித்தமரத் 119

தேனமெழு பத்தேழு இரும்பில்இரு பத்தேழு
பானைநா லாறுவகை பாலேன—மானதஞ்சு 120

கோலேன மூவேழு கொடியேனம் பன்னிரண்டு
தோலேனம் அவ்வளவே சொல்லக்கேள்—மேலான 121

கல்லுபதி னெட்டேனம் கயிற்றில்இரு பத்தேனம்
நல்லமா றஞ்சேனம் நங்களுட—இல்லமுதல் 122

இருவகையா லேனம் இருநூற்றி எண்பத்தஞ்
சருமறையோர் கண்டகணக் காமெனவே—வருதொழிலுக் 123

கின்ன மனேகேனம் இயம்ப முடியாது
சென்னி மலையிடும்பா செப்பக்கேள்—நன்னிலத்தின் 124

---

112. நிலத்தேனம்—மண்ணேனம்.
116. சுணங்கு—பட்டி நாய் 117. ஞாளி—வீட்டு நாய்
118. வெருகு—பூனை

மண்ணுளும் வேந்தருக்கு மகுடமுடி சூட்டுதற்குக்
கண்ணுளர் கைத்தொழிலாற் காசினியில்—எந்நாளும் 125

பாரை யுழுதநல்ல பயிர்செய்ய வேணுமென்று
ஏருதொழில் ஏனமெ லாய்படைத்தோம்—சீரான 126

## வேளாளர் வாழும் இடங்கள்

டில்லிபாட் சாவினுட தேசமெனும் மைசூரும்
நல்ல மலையாள நாடுகொச்சி—கொல்லம் 127

கோழிக் கோடு கொடுவாய்பா லக்காடு
சூடுமுடி ராம துரைநாடு—கூடுதிரு 128

நெல்வேலி கள்ளர் பதி டெப்பைரெண்டு பாளையமும்
நல்மதுரை தஞ்சாவூர் நாகூரும்—செல்வமுள்ள 129

செஞ்சிதிரி சிராப்பள்ளி தேவணும் பட்டணமும்
மஞ்சிபுதச் சேரிசென்னை மாநகரம்—கஞ்சிநகர் 130

காமாட்சி யம்பன் கருணையினால் இவ்வுலகில்
நாமாட்சி யாயிருந்த நாளையிலே—பூமாட்சி 131

## பழைய அரசர்களின் ஆட்சிமுறை

நீதிதவ ருமூவேந்தர் நேமியுல காண்டிருந்தார்
மாத மும்மாரி பெருஷிக்கும்—ஆதலினால் 132

மேழிக் கொடிபடைத்த வேளா ளரையழைத்து
ஆழிக் கடற்புவிகள் அத்தனையும்—வாளிற் 133

கொழுமுனையா லேயுழுது குவலயத்தைக் காருமென்று
விழுதிலையுங் காயும் விடையருளத்—தொழுதுநின்று 134

காராளர் எல்லோரும் கலப்பை தனைப்பூட்டி
ஏராள மாய்ப்பயிரை யிட்டார்காண்—பாராளும் 135

வேந்தர் நடத்துநெறி மேதினியிற் சொல்லக்கேள்
வாய்ந்தநக ரிற்புதிதாய் வந்தகுடிக்—கீந்தபணம் 136

---

127. டில்லி பாட்சா—டில்லியை ஆண்ட மொகலாய மன்னர். ஒரு காலத்தில் மைசூர் அவர் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது.

130 கஞ்சி நகர்—காஞ்சிபுரம்

132 வேந்தர்—மூவேந்தர்.

134. விழுதிலை—வெற்றிலை; காய்—பாக்கு

ஒருவருஷ மானியமாய் உண்டிருக்க விட்டிடுவோர்
மறுவருஷம் மன்னர் மதகயமேல்—முரசறைந்து 137

கொத்துவெட்டுக் காட்டுக்குக் கோடாரிக் கோர்பணமாய்
வைத்துழுதோர்க் கஞ்சுபணம் ஆனபுஞ்சை—நத்தைஎளர் 138

நஞ்சை விளைவயலில் நாலிரண்டில் ஒன்றுதந்து
அஞ்சலென வேமுரசம் அறைந்தனர்காண்—செஞ்சாலிக் 139

## விளைவுப் பொருள்கள் 79

கதிர்விளைவு நெல்லுதினை கம்புசோ ளம்வரகு
குதிரைவாலி ராகிசாமை கோதுமை—விதவிதமாய்க் 140

காய்விளைவு ஆமணக்குக் கடலைதட் டையுழுந்து
காணம் அவரை துவரைஎன்ஞ—நேயமுடன் 141

பருத்திகொத்த மல்லிகையும் பயறுவெந்த யஞ்சீரம்
வருக்கைதென்னை மாப்பலா வன்க்முகு—இலுப்பைபனை 142

கச்சநா ரத்தைநெல்லிக் காய்கொழுமி நாவலெலு
மிச்சை புளிமுருங்கை வேண்டுதல்லாம்—எச்சுமாப் 143

பாகல் புடலவரை பரங்கிசுரைக் காய்மிளகாய்
பூகக்கத் தரிபீர்க்குப் பூசணிக்காய்—தாகந் 144

தணிவதற்கு வெள்ளரிக்காய் சார்ந்தகுரு மத்தையுடன்
அணிகாதி லக்கடுகு மிளகும் அசமதமும்—இனிதான 145

நாவுக் கினியசுவை நாட்டிலுள்ள காய்கறிகள்
மேவி வளர்த்தோம் வெகுவகைகள்—பூவுலகில் 146

கருணை பிடிசேனை காவத்தி முள்ளங்கி
சிறுகரும்பு சக்கரைவள்ளி தீங்கரும்பு—மருவில்லா 147

மஞ்சளிஞ்சி வெங்காயம் வசம்பு கிழங்கினங்கள்
செஞ்சொல்கவி வாணர்சொல்லித் தீராது—மஞ்சிவகை 148

கீரையுடன் வெற்றிலையும் கிள்ளுபுகைக் கஞ்சாவும்
பாருலகு தன்னில்இலை பயிர்செய்தோம்—தூருடனே 149

புல்லுதட்டு சக்கைதிரி பொட்டுக் கடிக்கோல்
எல்லாம் எடுத்துப்போ ரேற்றியே—நல்லமுதம் 150

---

141. காணம்—கொள்ளு.

142. சீரம்—சீரகம்; வருக்கை—பலாவகைகளில் ஒன்று.

145. அசமதம்—ஓமம்.

வாலி கடைந்தாற்போல் மாநிலத்தி லேஃதின மும்
பால் தயிர் வெண்ணெய்மோ ரும்படைத்தோம்—மேலான 151

கதிர்விளைவு ஒன்பதுடன் காய்விளைவு நாற்பத்தொன்
றிதமாங் கிழங்குவகை யீராறு—அதியமுத 152

மஞ்சுவகை புல்லேழு மான இலை யைந்துடனே
இஞ்சொலெழு பத்தொன் பதுவிளைவு—மஞ்சிவட 153

காசிரா மேசுரத்தின் காதமுந் நூற்றறுப(து)
தேசமெல்லா நாங்கள்பயிர் செய்தோம்காண்— ஆசையினுற் 154

பூஷண மாடைநிதி பொன்வெள்ளி செம்புதரா
நேசமுட னேபடைத்தோம் நீணிலத்தில்—இராசர்களும் 155

**அரசர்களினும் வேளாளர்கள் சிறந்தவர் என்பது**

பொன்னேரைக் கட்டிவைப்பார் பூவுலகில் நாங்களுமே
பொன்னேரைக் கட்டிப் புவியுழுவோம்—நன்ஞளில் 156

தேரை நடத்தித் திருவிழா என்றுரைத்தால்
ஏரை நடத்திவிழா என்றுரைப்போம்—பாரதனில் 157

நீரில் விழாச்சாலை நிலத்தமைத்தால் நாங்களொரு
மூரி விழாச்சாலை முன்சமைப்போம்—சேரலரைக் 158

குறைகூற வைத்திடுவார் கோவேந்தர் நாங்கள்புனக்
குறைகீறி வைப்போம் குவலயத்தில்—அறைவதுகேள் 159

வெறுத்தமுடி மன்னருடல் வேருக்கி வைத்திடுவார்
மறித்துழுது சேருக்கி வைத்திடுவோம்—கருத்திருளிற் 160

கரப்பவரைக் காலவெட்டிக் கடைவிடுப்பர் நாங்களுமோ
வரப்புவாய்க்காலவெட்டிமடையமைப்போம்-தரிப்புகொள்ளை 161

நிரம்பவடிப் பாரரசர் நீணிலத்தில் யாங்கள்
பரம்பை அடித்துப் பயிர்செய்வோம்—விரும்புகொள்ளை 162

விதைத்திடுவா ரேயரசர் விளைபுனத்து நாங்கள்
விதைத்திடுவோம் சற்றே வினவக்கேள்—புத்தரசர் 163

---

158. சேரலர்—பகைவர். மூரி—எருது.

161. கரப்பவர்—மறைந்து திருடுவோர்.

162. 'விரும்பு—அரசர்' = பகைவர் நகரை அழித்து அரசர் கொள்ளை விதைப்பார்கள்.

நட்டமுளை கண்டாலே நாடுகலங் கும்பயிர்கள்
இட்டமுளை கண்டா லெலாமகிழ்வார்—வெட்டிச் 164

செயிராடல் கண்டாற் சிந்தை வடுத்தீர்வார்
பயிராடல் கண்டாற் பசிதீர்வோம்—அயிலாலே 165

உயிரு களைப்பரிப்பார் உலகுதலில் எங்கள்
பயிரின் இடரு களைப்பரிப்போம்—செயிரரசர் 166

பாதமதி லேகனகம் பாரிலுள்ளோர் தான்சொரிவர்
மாதமும் மாரிவரு ணன்சொரிவான்—ஆதரவாய்க் 167

கிளைக்கூட்டங் கண்டரசர் கெலிவாஞல் நாங்கள்பயிர்க்
கிளைக்கூட்டங் கண்டு கெலிசெய்வோம்—தளபதிகள் 168

புடைசூழல் கண்டரசர் பூரித்தால் எங்கள்பயிர்
புடைசூழல் கண்டுமனம் பூரிப்போம்—இடுப்பணிதி 169

பூட்டல்கண் டேயரசர் பூரித்தால் எங்கள்பயிர்ப்
பூட்டைகண் டேயுலகம் பூரிக்கும்—நாட்டில் 170

மன்னர்க்கு மன்னர் வணங்கித் தலைசாய்ப்பார்
செந்நெல் கதிர்விளைந்து சிரஞ்சாய்க்கும்—ஒன்னலரை 171

வாளாற் படுகளத்தின் மகுடமரி வைப்பார்க்கு
வாளாற் படுக்கையரி வைத்திடுவோம்—மாழையெனும் 172

பொன்னிற் கதிர்முடியைப் போர்வேந்த ரேசுமப்பார்
செந்நெற் கதிர்முடியை யேசுமப்போம்—துன்னலரைக் 173

கட்டி யெடுத்துயரக் கால்தலைகீ ழாயடிப்பார்
தட்டுவிரை நெற்கதிரைத் தானடிப்போம்—வட்டக் 174

களப்போர் குலைத்துதறிக் கருதார் தலையரிவார்
களப்போர் குலைத்துதறிக் கருதரிவோம்—தளபதிகள் 175

தாம்புகட்டி வெட்டிப்பிர தானி தலையெடுப்பார்
தாம்புகட்டி மெட்டித்தா னியமெடுப்போம்—காப்பிரமாய் 176

---

164. நட்டமுளை—கூடாரம் போடுவதற்கு நட்ட முளைக்கோல்.
165. செயிராடல்—போரில் வெற்றி.
வடு—மனத்துயர், வசி—பாடபேதம்.
165. அயில்—வேல்.
169. பணிதி—ஆபரணம்.
171. ஒன்னலர்—பகைவர்
172. படுக்கையரி—வைக்கோல் படுக்கை.
173. துன்னலர்—பகைவர்; 175. கருதார்—பகைவர்.
176. பிரதானி—வேறுதேசத் தலைவர்கள்.

நவதா னியங்கிழங்கு நற்காயி லேரசிதம்
புவிமேல் விளைவு பிறப்பித்தோப்—தவறுது 229

ஆறில் ஒருகடமை அரசருக் குச்செலுத்தி
மாறின்றி வாழ்ந்தோம் வழிமுறையாய்—பேறுடைய 230

மும்மன்ன ராட்சி முடியத் தூடுக்கர்பலர்
இம்மண் டலங்கொண்டார் இப்புவியில்—தம்முடைய 231

## கொடியவர்கள் அரசராதல்

வேள்வி கலைவேதப் வேதியர்கள் விட்டார்கள்
கேள்வியற்றுப் போச்சு கெடியதனில்—நாளும் 232

முடிபெற்ற மன்னவர்க்கு முன்னோடி எதிர்நின்று
அடிபட்ட துண்டர் அரசானார்—கெடிபெற்ற 233

பொய்யும் புரட்டும் புலையும் கொலைகளவும்
ஐயமறக் கற்றோர் அமைச்சர்களாய்—வையகத்தில் 234

ஆனைமா ருட்டமது அந்தரத்திற் செய்தவரும்
சேனைபா கர்கணக்கர் தேசமதில்—மாநிலத்தில் 235

தஞ்சமென்று வந்தோரைத் தலையிலே கற்போடும்
பஞ்சமா பாதகரே பணிவிடையாள்—வஞ்சமன 236

வாக்குவே ருயுரைக்கு மன்ன ருலகத்திற்
போக்குமனை யாய்த்தூரிப் போச்சுதையா—சீக்கிரமாய் 237

அசிகைஎனும் சாகு வளியளந்து குளிமாறி
யுசிதமுட னேகணக்கை யொன்றிரண்டாய்—ரசிதமுடன் 238

வயல்பழனங் குண்டல்வெட்டு மாவேலி வாய்க்காலும்
செயல்பரைநல் விரைப்புநிலம் சிலகுளிபோல்—நயமுடைய 239

காடு புனம்விரைப்புக் கலம்சல கைக்கவுரு
ஓடை குளம்வள்ள மோர்படியென்—றேடதனிற் 240

---

231. கண்ணி 34 குறிப்புரை காண்க.

233. தொடி—காடு.

237–240. சாகுபடியளக்கும் கணக்கர்கள் தவறுகக் கணக்குக் குறித்தலைக் காட்டும்.

## கொடுங்கோலர்கள் அதிகவரி விதித்துக் கொடுமை செய்தல்

பேரெழுதி முன்னிகுதிப் பேச்சும் அழித்துவிட்டு
ஓரிரட்டி மூவிரட்டி உலகுதனில்—நேரில்லாக் 241

கந்தாயம் சேனையம் கட்டாய மல்லாயம்
நிந்தாய மானசுங்கம் நீள்புவியில்—வந்ததென்று 242

பட்டிவரி வாலுவரி பாரிலுருள் தேருவரி
தட்டைவரி வள்ளவரி தலத்துவரி—கெட்டதொழில் 243

மாறிக் கட்டுவரி மந்தைவரி குத்தகையால்
ஊரைக் கட்டியவரியு முண்டு செய்து—பாரதனில் 244

கைவீச்சுக் காசுவரி கட்டுமனை பிச்சைவரி
வையகத்தில் ரூபாய் வரியெனவே—மெய்யான 245

ஏற்றத் துலைவரியும் ஏறியகுண் டாள்வரியும்
நாற்றிசைக்கும் பேராய் நடுவெழுதிச்—சேற்றித் 246

துகைகணக் காய்ச்சொல்லத் துரையருளி னரெனவே
பகைக்கணம்போற் றார்களும் பற்றினர்காண்—மிகுத்தபணப் 247

பிணையோலை கையெழுத்துப் பின்னை கிரியுடனே
மணைக்காவல் தப்பைக்கோல் மாற்றடியு மிணைச்சேருந் 248

கைவிலங்கு கால்விலங்கு கட்டுகிட்டிக் கோலுடனே
ஐயகோ என்றே அழுதுசிலர்—மெய்யாக 249

வெள்ளிபொன்னுச் செம்புதரா வெண்கலம்பித் தளையிய
முள்ள நவநிதியம் ஒன்பதுடன்—மெள்ளக் 250

கடற்படு திரவியமுங் காடுவனம் சோலை
திடற்படு திரவியமுஞ் சேரவிற்று—அடைவுடனே 251

வட்டில்மொந்தை ஆபரணம் மாடெருது ஆடெருமை
தட்டுபுல்லு விற்றுத் தணியாமல்—வெட்டிவைத்த 252

சொந்தக் கிணறுவிற்றுத் தொல்புவியா தீனமெல்லாம்
இந்தவித மாய்விற் றிழந்தனங்காண்—அந்தணருந் 253

தாரைநிலம் பூசைபெட்டி தவலைசொப்பு விற்றிழந்து
ஊரைவிட்டு யாத்திரைக்கு ஓடினார்—பாரதனில் 254

---

242. சேனையம்—சேனைவரி; கட்டாயம், மல்லாயம்—அரசர் விதிக்கும் அநியாய வரிவகைகள்.
250. தரா—கலப்பு வெண்கலம்.
248. பின்னைக்கிரி, இணைச்சேர்—அரசர் விதிக்கும் தண்டனைகள்.

சத்திரிய ராஜர் தரணி தனையிழந்து
கத்திகளை விற்றிந்தார் காசினியில்—வைத்ததன 255

செட்டிகளும் கெட்டலைந்து திராசுபடிக் கல்முதலாய்
ஓட்டுத் துகையாய்விற் றெழிந்தனர்காண்—ரெட்டிகளும் 256

தரிப்புநிலை யில்லாமல் தாசரைப்போல் நாமமிட்டுத்
திருப்பதி யாத்திரைக்குச் சென்றார்கள்—விருப்பமுடன் 257

கடைகாலுங் கோலும் கனமா டெருதுகளும்
இடையர்களும் விற்றிந்து ஏகினர்கள்—படைமரமும் 258

நாடாவும் அச்சுடனே நல்லேன மானதெல்லாம்
சேடரும்செங் குந்தர்விற்றார் செகதலத்தில்—கூடியிருந் 259

தாசர்களு மாண்டிகளும் சங்குசே கண்டிவிற்றார்
வேசியர்கள் சேலைமுதல் விற்றிந்தார்—பூசைமணி 260

நம்பியார் விற்றிந்தார் நட்டுவன்கைத் தாளம்விற்றான்
தம்பூரைச் சங்கீதக் காரன்வீற்றான்—அம்புவியிற் 261

கூடங் குறடுசுத்தி கொல்லன் உலை யாணிவிற்றான்
மாடமயில் வாச்சியுளி வலியவிற்றான்—நாடறியக் 262

குசவன் திரிகையொடு குண்டுக்கல் லுப்பலகை
நிசமாக விற்றிந்தான் நீணிலத்தில்—அசகனெனும் 263

வண்ணானும் சார மண்ணுடனே வெள்ளாவி
குண்ணுந்தா ளியும்விற்றுக் கொடுத்தான்—மண்மீதிற் 264

கடைக்கருவி யானோர்கள் கத்தி குடுக்கை
அடைப்பமது விற்றிந்தார் அவனிதனில்—நடப்பரெனும் 265

பண்டிதருங் கூத்தர் பாரி லிசைக்குரியோர்
தண்டமிழ்தே ருந்தொழிலைத் தவிர்த்துவிட்டார்-மண்டலத்தில் 266

கட்டுக்கொல் லனைவோருங் காசாவர்க் கமுந்துயரம்
பட்டகதை சொல்லஇருள் பகலாகும்—அட்டதிசை 267

வலியர் எளியர்பொருள் வவ்வுவதும் வல்லிருளில்
நலிவாகக் கள்ளர்கொள்ளை நண்ணுவதும்—கலிகால 268

நாடெல்லாம் துர்ச்சனர்க்கு ராசாங்க மானதிறைச்
சாடி மிகுத்துச் சமஸ்தான—மீடழிந்து 269

---

265. கடைக்கருவி—நாவிதர்.

267. காசாவர்க்கம்—நல்ல குடிகள்.

269. சாடி—கோள்.

வேதமொடு சாஸ்திரமும் மேற்புரா ணக்கலையும்
ஓதுவது மெல்லாம் ஒழிந்ததையா—கீதமொடு 270

கேளிக்கை யும்நடனம் கெம்பீரக் கூத்தாடல்
வாடிக்கை விட்டுவிட்டார் மாநிலத்தில்—நாளிலடி 271

யாக்கினைக் குள்ளாக்கி அவதிபொரு மல்உயிரைப்
போக்கினு ரேசிலர்கள் பூமியிலே—பாக்கியம்போய்க் 272

கட்டிவைத்த தானியமுங் கனகமணிப் பூஷணமும்
எட்டேருப் புண்ணையமும் இழந்துவிட்டோம்—சட்டியுடன் 273

பானையெடுத் தூர்தோறும் பழங்கஞ்சி கிட்டாமல்
சேனையது போல்இறந்தார் செகதலத்தில்— ஆனதினுற் 274

குடித்தனங்கள் செய்திந்தக் குவலயத்தில் வாழ்வதற்குப்
பிடித்த கொம்பதெல்லாம் பெலனில்லை—வடித்தசுடர் 275

வேலவனை யல்லாமல் வேறுதுணை யில்லையென்று
ஞாலமதில் வேளாளர் நாடிவந்தோம்—காலமதில் 276

தந்தைதாய் பாட்டன் தவக்குறையோ காராளர்
வந்து பிறந்த வழிமுறையோ—இந்த 277

மேழித் தொழிலெடுத்து மேதினியில் நாங்கள் துயர்
ஆழிக் கடலில் அழுந்துவதோ—கோழிக் 278

**சென்னிமலை இடும்பனிடத்தில் வேளாளர் விண்ணப்பம்**

கொடியுடையோன் றன்னைஒரு குன்றேடுத்திந்தப்
படியில்வைத்த காளிப் பதியிடும்பா—அடியேங்கள் 279

குடும்பத் துடன்இந்தக் குவலயத்தில் வாழ்வதற்கு
இடும்பக் குமரா இயம்பையா—திடம்பெறவே 280

காத்தாலு முன்பெருமை காராள ரைப்புவியிற்
சேர்த்தாலு முன்பெருமை செப்புவோம்—பூத்தமலர்த் 281

தண்டா மரைப்பதமுன் தானே சரணமெனத்
தெண்டம் பணிந்தெழுந்தார் செகதலத்தில்- அண்டர்தொழும் 282

இடும்பக் குமரர் இரங்கி அபயமளித்
திடம்பெறுகங் கைக்குலத்தீ ரிப்புவியிற்—கொடும்பகைசேர் 283

274. சேனை மதஇரர்தார்—பாடபேதம்.

## இடும்பன் அபயமளித்தல்

சூரருக்குத் தேவர்களும் தொண்டுபட்டா ரேசிலநாள்
வேரறுப்பாய்ச் சூரர் விழுந்துவிட்டார்—பாரதனில் 284

ஆறுக்குக் கேடே யடுப்பதில்லை தின்னும்
மிருகத்தின் கேடே மிகுத்துவிடும்—வருடத்தில் 285

பன்றிபல குட்டிகளைப் பாலிக்கும் நற்பசுவோர்
கன்றதனை ஈனுமிந்தக் காசினியில்—என்றறிந்து 286

அப்புவியில் தர்மநிலை ஆகுமே அல்லாமல்
வெம்பதர்ம மேநிலையாய் விளங்காது—என்பதினாற் 287

பொறுத்தார் புவியாள்வார் பொங்கினார் காடாள்வார்
உரைத்தமொழி பொய்போகா துத்தமரே—வெறுத்துமனம் 288

நீங்கள் சலித்தால் நெடுப்புவியும் ஆவதில்லை
ஓங்குமுயிர் எல்லாம் ஒழிந்துவிடும்—ஆங்கதனால் 289

இந்தப் புவியில் எழுந்தருளி வேளாளர்
வந்த பிறவி வகைகேட்பீர்—கொந்தணியும் 290

## இடும்பன் வேளாளர்களின் தோற்றம் கூறுதல்

சங்கரரும் பார்வதியும் தான்மகிழ்ந்த நாளதிலே
கங்கை பெருகியிந்தக் காசினியில்—பொங்குவதைக் 291

கண்டுசிவ னார்மகிழ்ந்து கையால் அணைத்தவுடன்
ஒண்டொடியும் பாலகனும் உற்பவித்தார்—அண்டையுள்ள 292

கங்கை எடுத்தமுதங் காசினியி லேகொடுத்து
மங்கையொடு புத்தி ரனைவளர்த்தாள்—கங்காளன் 293

புத்திரர்க்கும் புத்திரிக்கும் பொன்காப் பணிந்துதொட்டில்
உத்தரிகம் பட்டாடை யூசலிட்டுச்—சித்திரம்போல் 294

இருந்து தவழ்ந்துநடந் தெழின்மிகுந்த சூரியர்போல்
அருந்ததிநேர் மங்கையுடன் அவர்வளரத்—திருந்துமொழி 295

கற்றவே ளாளனென்றுங் கன்னிவேளா ளச்சியென்றும்
உற்ற திருநாமம் ஓதினார்—முற்றும் 296

---

290. கொந்து—பூங்கொத்து    293. கங்காளன்—சிவன்

294. உத்தரிகம்—மேலாடை

நால்வேத சாஸ்திரமும் நானிலத்தோர் முற்கதையும்
பாலருக்கு மேற்கப் பயின்றருளி—மேலான 297

பாஷை கலைஞானம் பதினெண்பு ராணகவி
பேசு சுரஞானம் பிறப்பிவைத்து—வீசு 298

மாயுதப் பரீட்சையுட னேதே ருங்குதிரை
வாயுவென ஏற வருத்திவைத்துத்-தூயமுறை 299

வேள்வி நிறைவேற்றி வேளாள இந்த்ரனென்று
வாழ்கயிலைச் சாரல் வனத்திருந்த—நாளதிலே 300

**சுராரானர் வரலாறு**

மாவலியை மூன்றடிமண் மாயவனுர் கேட்டளவில்
ஆவலுடன் மாவலியும் அருள்செய்தான்—பூவுலகை 301

மாதவனுர் ஓரடியாய் மண்மேன் மிதித்தவுடன்
பூதேவி யாருடலம் பூரித்துப்—பாதவெயர் 302

பட்டதினுல் மங்கையுடன் பாலன் பிறந்ததனுல்
இட்டமுடன் பூமகளும் இன்பமெய்தி—விட்டுனுவின் 303

பாதம் பணிந்'திந்தப் பாலனுமிங் கேவளர
வேதாவின் ருதா விடையருளென்'—ருேதவே 304

கண்ணர் மனமகிழ்ந்து கண்ணுலே பார்த்தருளிப்
'பெண்ணமுதே! யிந்தப் பிள்ளையினை—என்றைக்கும் 305

நீயே வளர்த்து'கென்று நெடியோன் அருள்வழங்கத்
தாயான மண்மகளுந் தானெடுத்து—நேயபனி 306

நீரால் முழுதுவித்து நெல்விரையைத் தான்கொடுத்து
ஆருநாட் காப்பும் அரைஞாணும்—சேரவே 307

பூட்டி யலங்கரித்துப் பொன்னூசற் கண்வளர்த்தி
நாட்டி விருந்துதவழ்ந் தேநடந்து—கேட்டமொழி 308

கொஞ்சிப் பயின்று குளிர்பிறையைத் தானழைத்து
மஞ்சிற்றில் கோலி வளர்நாளில்—முஞ்சி 309

---

299. சுரஞானம்—இசைநூல் அறிவு.

304. வேதாவின் தாதா—திருமால்; பிரமன் தந்தையே.
விடையருள்—நான் வளர்த்தற்கு உத்தரவு கொடு

309. மஞ்சிற்றில்—மண்சிறுவீடு.

உபநயன மயிர்களைத லுகிரணைத்த லூட்டல்
தபவேள்ளி நீதிமுறை தானடத்திப்—புவிமிசையில் 310

சத்தரிஷி கள்மகிழ்ந்து தையனல்லாள் புத்திரனை
இத்தலத்தில் காராளன் என்றழைத்துப்—புத்திரிக்குக் 311

காராள நாச்சியென்று காசினியிற் பேருமிட்டு
நேராக அஞ்சுவய தேநிறைந்து—பாரதனில் 312

வேதமொடு சாத்திரமும் மேற்புரா ணக்கதையு
மோதியுணர்ந் தானைபரி யூர்நடத்திச்—சாதனையாய் 313

ஆயுதமும் விற்றொழிலும் அண்டர்விஞ்சை மந்திரமும்
மாயனிது வெல்லாம் வருத்திவைத்தார்—நேயமுடன் 314

தவமுனிவர் தங்கள் தவசு நிறைவேற்றிப்
புவியரசர் தங்களுடன் போர்செய்து—அவர்மதமும் 315

குரும்பு மடக்கியிந்தக் குவலயத்தில் நீதியதாய்
வரம்பழியா மல்நடத்தி வாழ்நாளிற்—சுரும்பமரும் 316

**காராளன் ஊர்வசியைக் காப்பாற்றச் சூரனோடு போர் செய்தல்**

மாலைபுனை செஞ்சடையான் வாழ்கயிலை யின்சாரல்
கோல மலர்கொய்த கொம்பனையாள்—ஞாலமதிற் 317

கண்டவுட னேயசுரன் கைப்பற்ற வுருவசியாள்
அண்டர்பணி தேவர்க் கபயமெனக்—கொண்டசுரன் 318

போவதுகண் டிந்தப் பூபாலன் காராளன்
கோபமிகுந் தாயுதக் கோலம்செய்து—ஆவலுடன் 319

மாயவனைத் தான்பணிந்து மலர்மகளை யும்தொழுது
தூயவிடை பெற்றுத் தொடர்ந்துசென்று—நேயமிலாச் 320

சூரனுட னேயெதிர்த்துத் தோமரங்க ளோடுபிண்டி
பார முசலம் பரிசுடனே—நேரிசமுங் 321

கொட்டு ரறக்களையுங் கொடுஞ்சூரி யத்திரமும்
மட்டில்லா வாளி வருஷித்தார்—துட்டனெனுஞ் 322

---

311, சத்தரிஷி :— அகத்தியன், ஆங்கிரசன், கவுதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன். நல்லாள்—பூமிதேவி.

317. கொம்பனையாள்—ஊர்வசி.

326. விடையோன்—சிவபெருமான்.

321. நேரிசம்—அம்பு. முசலம்—உலக்கை.

சூரன் மலைந்தலறத் தொடர்மன் னவனுடைய
தேர்பரியா ளானைத் திரள்நெருங்கி—வீரமுள 323

## வேளாளன் காராளனுக்கு உதவியாகப் போருக்குச் செல்லல்

சங்குத் தொனிமுழக்கிச் சத்தங்கள் ஆர்ப்பரிக்கக்
கங்கைமகன் வேளாளன் காதிற்கேட்—டங்கண் 324

ஏதோ அசுரர்தொனி எதிர்த்துப்போர் செய்வதையும்
மாதாவே நான்கண்டு வருவனென்று—பாதார 325

விந்தம் பணிந்து விடையோன் அருள்பெற்று
மந்திர செபமுடித்து வாளெடுத்துக்—குந்தமொடு 326

நேரிசமும் வல்லயமு நீல நிறக்கணையும்
சூரியனு ரத்திரமுஞ் சூழமழுப்—பாரவேற் 327

சக்கரமும் வில்லம்பும் தானெடுத்துக் கச்சைகட்டிச்
சிக்கெனவே அவ்வனத்திற் செல்லவே—அக்கணமே 328

காராளன் மைத்துனனைக் கண்டுகளி கூர்ந்து இரு
பேராள ருங்கூடிப் பேசியே—சூராளர் 329

யானைபரி தேர்காலாள் அத்தனையும் பட்டுவிழச்
சோனைமழை போல்வாளி தொடுத்துவிட்டார்—கானசுரர் 330

வில்வளைத்து வேல்சூலம் விடாமழைபோ லேசொரிந்தார்
அல்லும் பகற்கானில் அனல்பரந்து—கல்லுமலை 331

பூடுருவி வானில் உலாவுவதைத் தேவர்கண்டு
ஓடியரன் மாலுக் குரைத்தனர்காண்—நாடியவர் 332

## சிவன், திருமால் முதலியோர் போர்காண வருதல்

புத்திரர் விசித்திரங்கொள் போர்யுத்தம் காண்பமென
அத்தன் உமைகங்கை அருட்புதல்வன்—முத்தனொடு 333

வெங்கயன்றெய் வானைவள்ளி வேள்வீர பத்திரனுந்
திங்க ளவக்கோளுஞ் சிவகணமும்—பொங்குதிரு 334

---

327. வல்லயம்—ஈட்டி.

329. சூராளர்—அசுரர்.

333. புதல்வன்—விநாயகன்; முத்தன்—வைரவன்;
வெங்கயன்—இந்திரன்; வேள்—முருகன்.

மாலும் சிவனும் வளர்த்த புதல்வியரும்
சிலமதன் ரதியும் தேவர்களும்—நாலுகலை 335

வாணியயன் இந்திரையும் வலாரிமுனி வோர்கணமும்
காணவென வானிற் கவிந்திருந்தார்—தூணியிலே 336

அம்பெடுத்து விற்பூட்டி யார்ப்பரித்தான் காராளன்
கம்பமத யானைக் களிறெனவே—கும்பமுனி 337

யுண்டகட லொத்தவணி யூடுருவி வாளரக்கர்
துண்டங்க ளாகத் தொடர்ந்துவிழக்—கண்டுநின்று 338

சூரன்மிகக் கொக்கரித்துச் சூலா யுதத்தைவிட்டான்
காராளன் கண்டகண்ட மாயறுத்தான்—நேராகத் 339

தானவனுந் தண்டா யுதமெடுத்துச் சாடினான்
மானபரன் வேளாளன் வாளிவிடுத்—தானைபரி 340

சேனையொடு தேருமுதற் றெண்டா யுதத்துடனே
கானதனிற் றுட்டன் கதறிவிழ—வானுலவு 341

ஊருவசி யாள்கண் டுளமகிழ்ந்து போற்றிசெய்யத்
தாரைசின்னம் துந்துபியும் தான்முழங்கப்—பார்மீதில் 342

புட்ப ரதத்துடனே பொன்னுவிமா னங்களுடன்
தற்பரனு மாலும் சதுர்முகனும் முப்பத்து 343

முக்கோடி தேவர்களும் முனிவோர் மகிழ்ந்தகுதித்
தக்கணமே வந்து அவதரித்தார்—மிக்கான 344

காராளன் வேளாளன் கண்டுகளி கூர்ந்தவந்த
பேரா ளரைத்தொழுது பேர்பெற்றார்—சீரான 345

## வேளாள, காராளர் திருமணம்

கங்கைப் புதல்வியையும் காராள நாச்சியையும்
இங்கிருவர் தங்கட் கெதிர்மணமாய்ச்—சங்கரரும் 346

---

336. தூணி—அம்புப்புட்டி.
338. அணி—சேனைகள்.
339 தானவன்—சூரன்.
344. அவதரித்தார்—தோன்றினர்.
345. பேராளர்—சிவன் திருமால்.
346. கங்கைப்புதல்வி—வேளாள நாச்சி.
இருவர்—காராளன், வேளாளன்.

மாலு மதித்தவுடன் வாரதின நாள்யோக
மேல்கரண மிலக்கினம் விளங்கியதிற்—சாலப் 347

பவளத்தா லேமுகூர்த்தப் பந்தக்கால் நாட்டிப்
புவிவயிர நீலவளை பூட்டியே—நவநிதியான் 348

வேய்ந்துபட் டாற்கட்டி வெண்டரள மாலைதொட்டுச்
சாந்துபுழு குக்கதம்பத் தான்மெழுகி—வாய்ந்த 349

மணவறையைச் சோடித்து மால்முத மும்புசித்துப்
பணிதியுள்ள பொற்கலத்தில் பன்னிரண்டு—இணைச்சீரும் 350

அச்சுவெல்லம் தேங்கனியும் ஆனகத லிக்கனியுங்
கொச்சிமஞ்சள் மூவேழுங் கொண்டுவைத்து—உச்சிதமாங் 351

தட்டத்திற் சந்தனமும் சாந்து புழுகுமலர்
வெட்டுரா சிப்பாக்கு வெற்றிலையும்—பெட்டியினிற் 352

சீப்புச் சிணுக்கரிக்கி செம்பொனகை பட்டுமணக்
கோப்பிதமாய்ப் பன்னீரும் குங்குமமு—மாஸ்பதமாய்ச் 353

சோபனம்பல் லாண்டுசொல்லத் துடிமுரசுந் தான்முழங்கத்
தீபமிரு பாலேந்தித் தேவர்செல—ஆவலுடன் 354

அரன்மகன்வே ளாளர்குலத் தாச்சிமணச் சீரெடுத்துத்
திருமகளும் வாணிரதி செல்லவே—அருமையெனுந் 355

தமையன்கா ராளனுக்குத் தங்கைமணச் சீருசெய்ய
உமையவள்தெய் வானைவள்ளி யூடுசெலச்—சமயத்திற் 356

செஞ்சொன் மொழியாரைச் சீவி முடித்துமலர்
மஞ்சளொடு சந்தனமும் வாரியணிந்—தஞ்சனமுங் 357

கூறை யுடுத்துமடி கூட்டிக் கனிநிரைத்து
ஆரமொடு பொன்னகையெ லர்மணிந்து—பாரறிய 358

அச்சுதனார் தன்குலமும் அரனார் குலம்விளங்கி
நிச்சயதாம் பூலம் நெறிநடத்தி—மெச்சிமணத் 359

---

350. மால்—பெருமை.
'இளநீர்' (பி-ம்)

353. சிணுக்கரிக்கி—மயிர்கோதி; ஆஸ்பதமாய்—நிலையாய் வாழுமாறு
கோப்பிதமாய்—அழகாய்.

354. சோபானம்—மங்களம்; பல்லாண்டு—வாழ்த்து.

355. மணச்சீர்—மணத்தில் செய்யும் இணைச்சீர்.

359. கயம்—யானை.

திண்ணையின்மேற் பொற்பலகை சேர்த்துப் படாம்விரித்து
வண்மையலங் காரமுள மாப்பிள்ளையை—நன்மைபெறு 360

தோழ ரழைத்துவந்து தொல்கயமேல் விட்டிழிந்து
வாழுமண மேடைதனில் வைகினிரை—நாழிமுத்து 361

உழக்குப்பால் கிண்ணியில்விட் டுறுபளிங்குத் தட்டத்தில்
பழுக்கா யிலைநிதியும் பாலித்து—அழைத்தவுடன் 362

கருவித் தொழிலாளர் கைகுவித்து முன்னிருந்து
உருவநிலைக் கண்ணாடி யூடுசெல—அரசனுக்குப் 363

பாலில் முகந்துடைத்துப் பன்னுங்கு விட்டொதுக்கி
மேல்மீசை தன்னை மிகத்திருத்தி—நாலுவிதக் 364

கத்தி யிடுக்கி கைச்சுருதி கத்தரிக்கை
மெத்தவித நானு விதத்தொழிலும்—சித்திரம்போல் 365

ஒப்பனைசெய் தேதிலத்தி னுற்றநல் லெண்ணைசிரத்
தப்பங்கித் தானமதை யாட்டினார்—பொற்படாம் 366

மேயபொன் னாடை விசிரநடந் தானையின்மேற்
போய்விடுதி மண்ட பம்புகுந்தார்—சேயிழையைச் 367

சேடியர்கள் கூட்டிவந்து செம்பொன் மணவறையிற்
பாடியிருந் தெல்லோர்க்கும் பாக்கிலையு—நீடியே 368

செப்பிள மாதைத் திலதயி லத்தாலே
அப்பங்க மாட்டிமஞ்ச ளால்மூழ்கிக்—கப்படாங் 369

கட்டிமுலைக் கச்சணிந்து கையிற்பூச் செண்டெடுத்துக்
கொட்டிமுர சார்க்கமணக் கோவில்சென்றார்—இட்டமுடன் 370

கோதி முடித்துக் குங்குமஞ் சந்தனமுஞ்
சாதி மலர்மாலைத் தாரணிந்து—சோதிபெறு 371

மாடையொடு மாபரண மலங்கார மாய்ப்பூட்டி
நீடு சுருளருந்தி நீண்டசமு—தாடுகைக்கொண் 372

டார்ப்பரவ மாய்த்தொனிகள் ஆலிக்கக் கந்துகமேல்
மாப்பிள்ளையும் விட்டிழிந்து வந்துமணக்—கோப்பிதமாய்ச் 373

---

360. பழுக்காய்—பாக்கு.
இலை—வெற்றிலை.

363. கருவித்தொழிலாளர்—மங்கலர்.

364. பன்னுங்கு—(வழக்குச்சொல்) பல் நான்குடைய சீப்பு.

366. ஒப்பனை—அலங்காரம். திலம்—எள்.

செங்நெல்முத்தோர் நாழியின்மேற் றிருவி ளிறைவிளக்கு
மன்னுமெ ழுத்தாணி வைத்தான் றி—அன்னம் 374

அடைபொரியும் பிட்டமுது மாலாத்தி மஞ்சணீர்
விடுபாத் திரங்களில்வெவ் வேறுவைத்து—நடுவே 375

மணவரையி லந்த மாப்பிளேயைத் தாணிருத்தி
பிணேவிழியார் பின்னுமுன்னு மாகநின்று—இணையிணேயாய் 376

நிரைநாழி யன்னமொடு நீட்டியடை பிட்டேற்றிப்
பொரியுமஞ்ச ணீராற்றிப் போக்கியே—மறுபடியும் 377

வந்த வழியாக வல்லியர்முன் பாய்க்கழித்து
இந்தவித முற்சரிதி யிற்கழித்து—அந்தச் 378

சீக்கை கழித்துத் திரளமுத வூண்சுவையைச்
சாக்கிவண்ணு னுக்களித்தார் தாரணியில்—போக்கியமாய் 379

விடுதி தனிற்புகுந்தார் மெய்யிழைக்கும் அப்படியே
கடியமணச் சீக்கை கழித்துவிட்டு—விடையருளி 380

நக்கனயன் மாலுமெட்டு நாகலோ கத்தார்க்கு
முக்கனிபால் தூப முரசறைய—அக்கணமே 381

நாகராசன் வந்துபுற்றில் நவமணியெ லாமுதவ
ஏகசக்ரக வர்த்தி எடுத்துவந்து—தாகமுள் 382

பேரரசும் பேய்க்கரும்பும் பிரமண் ணமைத்தருளி
பாரறியப் பீதாம் பரமணிந்து—சீராகத் 383

திருநீல கண்டர் சிறப்புவைத்த அன்னமயில்
உருசாற் கரகமெடுத் தொக்கநிற்கக்—கரியதன்மேற் 384

சாலுமிடாக் கூசிகுடந் தங்கப்பா னேகலயம்
மேல்மூடி யேழு மிகவிருத்திப்—பாலுநெய்யு 385

---

373. கந்துகம்—குதிரை.
374. நாழி—படி.
376. பிணேவிழியார்—பெண்கள்.
379. சீக்கை—ஒரு நூல்.
381. நக்கன்—சிவன்; அயன்—பிரமன்; மால்—திருமால்.
382. சக்ரவர்த்தி—மங்கலன்.
384. திருநீண்டர்—குயவர்.

'திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்'—சுந்தரர்.

மொன்றில்நவ தானியமும் ஒன்றில்ரச வர்க்கமுமாய்
ஒன்றிலடைக் காய்மஞ்ச ளொன்றிலே நா-லொன்றில்வைத்துப் 386

பஞ்சலோ கங்களொன்றிற் பரிமளப்பு ராணமொன்றில்
குஞ்சரத்தின் மேலே கொணர்ந்துவைத்து—விஞ்சுமொளி 387

ஆயிரக்கால் தீப மருகில்வைத்து முளைப்பாரி
ஆயிரக்கா லேழு மமையவைத்துக்—காயமுதஞ் 388

செய்வதற்குக் குயாலைச் சிறப்பித்தான் பொன்பாண்ட
மய்யன் மகிழ்ந்தே யருளினார்—செய்யிழையார் 389

பொங்கமுதஞ் செய்தவர்க்குப் பொன்னின் குடமெடுத்தார்
மங்களமே ளத்தொனிகள் வாசிக்கக்—கங்கைநதிக் 390

கஞ்சனமு மஞ்சள்மல ராலாத்தி யுங்கனியு
மிஞ்சு மூப்சார மேயருளி—மஞ்சனமுங் 391

கொண்டுவந்து வைத்தடுப்புக் கூட்டிவா யுவையழைத்து
ஒண்டொடியார் பாலமிர்த மோர்முகமாய்—ரண்டுமணப் 392

பொங்கல்பணி கண்டிறக்கிப் பொற்கொடியா ருள்மகிழ்ந்து
வெங்கயனை யங்கே மிகவிருத்தித்—தங்கப் 303

பிரமண் ணரசாணி பேய்க்கரும்பு அன்னமயில்
கரகஞ்சால் பந்தமுட்டி கனதீபங்—திருமுளைக்கால் 394

பன்னிரண்டு பேர்க்குப் பாலமுத முக்கனிதேன்
தின்னு மடைதீப தூபமொடு—நன்னயமாய்ப் 395

பூசிக்க மாலைமணப் போர்வேந்தன் நீர்வழங்கி
நேசத்தோ டங்கே நிலம்வணங்கி—ஆசையுடன் 396

போயிருந்தான் விடுதியினிற் பொற்கொடியு மப்படியே
நேய மொடுவணங்கி நேரிழையின்—தாய்மனையில் 397

சென்றவுடன் தந்தைதாய் சீருமங்கை யார்களுடன்
ஒண்டொடியு மால்மகனும் ஒக்கவிருந்—தண்டர்தொழப் 398

---

387. குஞ்சரம்—யானை.

389. குயால்—குயவன். 'செய்வதற்கு யாலை' (பாடபேதம்)

391. கஞ்சனம்—நீர்.

393. வெங்கயன்—விநாயகன்.

394. பந்தம்—தீவர்த்தி; முட்டி—ஒருவகை மண்பாத்திரம்;
பந்தமுட்டி—மண்பாத்திர அடுக்குமாம்.

395. தின்னும்அடை—வெற்றிலை.

398. ஒண்டொடி—பெண், வேளாள நாச்சி; மால்மகன்—காராளன்.

பாலமுதை யும்படைத்துப் பரமனயன் மால்மகிழக்
காலையொரு சந்தி களித்தவுடன்—மாலைமண 399

வாள னலங்கரித்து மதயானை மீதிலிருந்
தாள ரணிசூழச் சத்தமாய்—மேளந் 400

தாரைசங்கு சின்னமொடு தம்பட்ட மல்லாரி
வீர முரசூத வெகுவிதமாய்ப்—பாரதனில் 401

மங்கை மணவாளன் மதயானை விட்டிழிந்து
வெங்கயன்முன் னங்கே மிகவிருந்து—பொங்கமுதம் 402

சர்க்கரையும் முக்கனியும் தான்படைத்துக் காயிலையு
மிக்கான தீபம் விளக்கியே—சிக்கெனவே 403

குட்டி வணங்கிக் கும்பிட் டெழுந்துநின்று
திட்டிதனைப் போக்குதற்குத் தேங்காயை—விட்டெறிந்து 404

புலவர் கவிவாணர் புகழ்ந்தேத்த யானையின்மேல்
திலதமென வேயிருந்து சென்றனர்காண்—நலமுடைய 405

மாமனார் தம்மனையில் மணப்பந் தலிலிறங்கிக்
கோமே தகமணைமேல் கொண்டுநிற்க—மாமின்னார் 406

பாற்கடலின் நீராலே பதம்விளக்கிப் பட்டாலே
நீர்துடைத்து மிஞ்சிரண்டு நேராகக்—காற்கணிந்து 407

தீபம் பணிமாறித் திட்டியது தான்கழித்து
சோபனம்பல் லாண்டுசொலத் தோழருடன்—தூபமிகு 408

மணவறையைச் சுற்றிவந்து மரகதநாற் காலியின்மேல்
குணதிசையை நோக்கியிருந் தேகுவித்தார்—மணமகளை 409

தாமம் புழுகுபன்னீர் சரிகையுடை கட்டிநல்ல
காம னிரதியெனக் கற்பித்தார்—மாமன்மகள் 410

நெற்றிப்பட் டம்மணிந்து நேரிழையைத் தானெடுத்துச்
சுற்றி மணவறையைச் சூழ்ந்துவந்து—கொற்றவன்பால் 411

---

402. வெங்கயன்—விநாயகன்.
405. திலதம்—தலைமை.
406. மணை—இருத்தற்குரிய ஆசனம்
409. குணதிசை—கிழக்குத்திசை.
410. தாமம்—மாலை.
411. நேரிழை—மணப்பெண்
"பைம்பொற்றிலகமொடு பட்டமணிந்த ஒண்கதிர் மதிமுகம்" 223
"செம்பொற்பட்டம் பைந்தொடிப்பாவை மதிமுகஞ்சுடர
மன்னவன் சூட்டி" 275-6.

—கொங்குவேள் மாக்கதை பதுமாவதி வதுவை.

இருத்தி வலப்பாகத் தேந்திழையார் சூழ்ந்துநிற்க
அருக்கனிக ராசனமு மந்தணர்க்கீந்—திருத்தியே 412

மூவேழு நூல்பிடித்து முக்கவுறு மஞ்சள்கட்டித்
தேவேந்தர லோகம்வளர் செந்நெல்முத்தை—ஆவலாய் 413

இருகை நிறைய எடுத்துப்பழுக் காயிலையிட்
டருமறையோர் கண்டுமகிழ்ந் தாசிசொலத்—திருவுறையு 414

மங்கைமணாளனுக்கும் வலக்கையின் முப்புரிநூல்
முன்கையில் காப்பு முடிசூட்டி—அங்கையிலே 415

நிறைய எடுத்தமுத்தை நீணிலத்தி லேயிருந்த
மறையவர்க்குத் தானம் வழங்கியே—முறைதவறு 416

வேள்வி நிறைவேற்றி வேதா கமம்புகன்று
வாழ்வுதரு மைங்கரனை மனதினினைந்—தாழ்வில்லாத் 417

தேங்கா யுடைத்துத் திரிநயன மூடியதில்
ஓங்குதிரு மங்கலிய முள்ளமைத்து—நீங்காமல் 418

மறையவர்கை யாலெடுத்து மந்திர செபம்செபித்து
இறையவனு மாலுமய னெல்லோரும்—நிறைசபையில் 419

அத்தங்கள் முட்டிவந்து ஆரணனு மேயுதவ
வத்துவை யேநினைந்து மாலுமகன்—கெத்தியுடன் 420

தன்னுடைய கையாலே சபையுளோர் தானறிய
பொன்னுறுநன் மங்கலநாண் பூட்டினான்—மின்னனையார் 421

விருமமுடி யாமெனவே வேதா கமங்கள்சொல
தருமதே வதையுந் தான்மகிழ—நிருமலமாங் 422

கங்கை புதல்விதனைக் காராள வேந்தனுக்கு
பொங்குநதித் தீர்த்தம் பொருத்தினார்—சங்குசக்ரன் 423

தாளால் அமைத்த தரணி மகளாரை
வேளா ளனுக்குநீர் விசரினர்காண்—நாளதிலே 424

அரனுமயன் மால்வேளு மைங்கரனுந் தேவர்களும்
புருகூதன் மாமுனித போதனரும்—விரகுடனே 425

---

412. அருக்கன்—சூரியன்.
418. திரிநயனம்—மூன்றுகண்கள்.
420. ஆரணன்—மறையவன்; வத்து—பரம்பொருள்;
மாலுமகன்—காராளன்; அத்தம்—கை;
முட்டிவந்து—குவித்துக்கொண்டுவந்து.
424. தரணிமகளார்—காராள நாச்சி.
425. புருகூதன்—இந்திரன்

பாலாற் கரந்துடைத்துப் பச்சிலையைக் கைப்பிடித்து
சாலப் பிரமண்மணந் தானேற்றி—மாலைமண 426

மணமகனைப் போற்றிசெய்து மங்கைக்கு மப்படியே
இணைகூடி வாழுமண மிட்டனர்காண்—கணமதிலே 427

அன்னை பிதாவு மரிவைவலக் கைபிடித்து
மன்னு மணவாளன் வலக்கைகொடுத்—தின்னிலத்தில் 428

இருவர் பிரியாமல் இருந்துநீர் வாழுமென்ச்
சிறுவிரலின் கைபிடித்துச் சேர்த்தியே—மருகிதனை 429

மாமனெடுத்து வலமாய் மணவறையைத்
தாம மணிபுயனுந் தார்குழலுக்—காமெனவே 430

சுற்றிவந்து தார்குழலார் சூழ்ந்துமனை யிற்புகுந்தார்
வெற்றிமண மாலைபுனை வேளரசன்—ரத்னமணிப் 431

பாயலிலே போயிருந்தான் பாகத்தில் மங்கைதனைத்
தாய்மாமன் வைத்தவுடன் தந்தைபழுக்—காயிலையோ 432

டான நவநிதியும் ஆபரண திச்சுருள்வைத்
தேனனையார் கைக்கோர்வை யைத்திருத்தி—மானனையார் 433

மங்களஞ்சேர் சோபனமும் வாழ்த்தினர் எல்லோர்க்குங்
குங்குமமுஞ் சந்தனமு மேகுழைத்து—அங்ஙனே 434

பூசிக் கதம்பப் பொடியெறிந்து மல்லிகையும்
வாசத் துடனணிந்து வாழைபலாத்—தேசிக் 435

கனிகள்பழக் காயிலையும் கனகமணி யேயுதவ
இனிதெனவே யாருமகிழ்ந் தேயிருந்தார்—தெரினியுடனே 436

பெண்ணெடுத்த மாமனுக்குப் பிரசாத முக்கனிதேன்
உண்ணுமென ஊட்டி உடனிருந்து—பன்னரிய 437

ஆபரணம் சேலைபரி யானை நவநிதியம்
பூவுலகோர் காணப் பொதித்தார்—நாவலர்க்கும் 438

---

426. மணம்—மணவறை.
430. தாமமணிபுயன்—மணமகன்; தார்குழல்—மணமகள்.
431. வேளரசன்—வேளாளன்.
432. மங்கை—காராள கச்சி.
433. தேனனையார்—மணமக்கள்; திருத்தி—பிடித்து.
435. தேசிக்கனி—எலுமிச்சம் பழம்.
438. பொதித்தார்—கொடுத்தார்.

வித்வசனர் வேதியர்க்கும் வேறுகவி வாணருக்கும்
முத்து நவமணிபொன் னேயளித்தார்—அத்தனே 439

ஆரவா ரங்கேட் டருக்கன் குணதிசையில்
தேரேறி வந்து தெரிசித்தான்—பாரிலுள்ளோர் 440

தானங்கள் செய்துவந்து தபனனுக்கு அர்க்கியமிட்
டானசெபம் பூசைசெய்தார் அமுதமினி—வேணுமென்று 441

செய்தவர்க்கு ஆலயத்திற் தேவர்முனி வோர்மறையோர்
கைநளின மாயமுதம் கற்பித்தார்—ஐயன்முதல் 442

அரியயனும் மால்குகனும் ஐங்கரனும் அம்பிகையும்
திருமகளும் வாணிவள்ளி தெய்வானே—அரிவையரும் 443

முப்பத்து முக்கோடி முதல்வோரு மாலேமணச்
செப்பொத்த கொங்கையரும் சேரவிருந்—தொப்பற்ற 444

சர்க்கரையும் முக்கனிபாற் றேனமுத முப்புசித்து
மிக்கவடைக் காயிலேயு மென்றருந்தி—பக்கரையெள் 445

பருதி குடதிசையிற் படிந்தவுடன் சந்தியானத்
திருமந் திரஞான செபமுடித்து—அரியசெப 446

பூசை முடித்துவந்து பூமணப் பந்தலின்கிழ்
நேசமொடு மாப்பிளேயை நீடிருத்தி—ஆயிழையார் 447

விடயமல ரட்சதையும் வெள்ளிக் கலத்திலிட்டுப்
பிடிசெம்பில் நீருடனே பேதையரும்—நடுச்சபையிற் 448

கொண்டுவந்து வைத்துநின்றூர் குழலோசை கள்முழங்க
அண்டர் முனிவோ ரருகிருந்து—பெண்டிர்க்குப் 449

பரியம் செலுத்துமெனப் பத்தரைமாத் தாலுயர்ந்த
வரியபசும் பொன்னேமலே யாக்குவித்தார்—வரிவிழியார் 450

நீரு வலமாக நிறையிட் டெடுத்துமண
நாரி யுறைமனேயி னண்ணரினர்காண்—பாரில் 451

மறையோர் முனிவோர் வாணர்கவி யாளருக்குக்
குறையாப் பசும்பொன் னேக்கொடுத்தார்—நிறைசபையிற் 452

---

440. குண திசை—கிழக்கு.
441. தபனன்—சூரியன்.
442. கற்பித்தார்—கொடுத்தார்.
451. நாரி—பெண்.

சந்தனங்கஸ் தூரிசவ் வாது கதம்பமலர்
முந்துமடைக் காயிலையு முறையிந்து — அந்த 453

ராத்திரியெ லாம்பரத நடனமொடு சங்கீதம்
பார்த்து மகிழ்ந்திருந்தார் பார்மீதில்—மாற்றுதின 454

மூனுநா ளப்படியே முப்பழமு முண்டிருந்தார்
வாணர் மறையோரும் வாழ்த்தவே—காணுமற் 455

பருதி குடதிசையிற் படிந்தவுடன் எல்லோரும்
வரிசையுடன் பந்தரின்கீழ் வந்திருந்தார்—புருஷனொடு 456

மங்கையரைக் கூட்டிவந்து மணவறையி லேயிருத்தி
அங்கவர்தங் கைநிறைமுத் தள்ளியே—இங்கிதமாய் 457

வெள்ளிலையுங் காயுமதின் மேல்வைத்துப் பின்கருவி
தெள்ளியதோர் காப்பைத் திருத்தியிட—ஒள்ளிதெனும் 458

எண்ணை மணுளனுக்கு ஏந்திழைகை யாலிட்டுப்
பெண்ணுக்கு மப்படியே புருடனுந்தொட்—டெண்ணைக் 459

கொருசேலையையிருவ ருடுத்திச் சபையறிய
முரசதிரத் துந்துபி முழங்கத்—திருவாழும் 460

பந்தலிலே முக்காலி பாலித் ததிலிருத்தி
வெந்தசீ கைக்காய்நீர் விளங்கியே—சிந்துங் 461

கங்கா சலக்கிரீடை கன்னியும ணுளனொடு
அங்கிருவர் மூழ்கியவ ராடியபின்—வங்காரப் 462

பீதாம் பரமுடுத்திப் பெண்ணையும ணுளனையும்
ஆதாரத் தாலே அலங்கரித்து—மாது நல்லாள் 463

மங்கிலியக் கூழ்சமைத்து மணவறையின் முன்னுகத்
தங்குபிர மண்கரகச் சால்தனக்கும்—வெங்கயத்தோ 464

டேழு முளைப்பாலிக் கினிதாய்ப் படைத்துமண
வாளனொடு மங்கையரு மேவணங்கி—நாளுமண 465

மண்டபத்தி லேயிருந்து வங்காரப் பள்ளையத்தில்
ஒண்டொடியுங் கூழமுத மொக்கவைத்து—ரண்டு 466

---

456. பருதி—சூரியன்; குடதிசை—மேற்கு.

458. கருவி—மங்கலன்.

462. கங்காசலக்கிரீடை—நீர் விளையாட்டாக.

466. வங்காரப் பள்ளையம்—பொன்னுலாகிய உண்கலம்.

பேருமிரு கையாற் பிசைந்தொருவ ருக்கொருவர்
ஊரிலுள்ளோர் தானறிய வூட்டினர்காண்—சீரான 467

சீளித்த பாலமுதைச் செய்யகரு விக்களித்து
ஆழிப் புனல்வாய்கை அலம்பியே—வீழிலையுந் 468

தின்று கதம்பமலர் சேர் அணிந்துமகிழ்ந்
தண்டர்முனி வோர்கள்மகிழ்ந் தாசிசொலக்—கண்டனெடு 469

பத்தினியாள் முத்தாலே பண்ணுங் குழியாடி
வெற்றியொடு தோல்விகண்டு மிகநகைத்து—முத்ததனை 470

மங்கைவண்ண னுக்களித்தாள் மணாளன்கரு விக்களித்தான்
சங்கு பொன்னு வெள்ளியெழுத் தாணியுடன்—அங்ஙனே 471

நிறைசாலிற் போட்டிருவர் நீடியகை யாலெடுத்து
வரிசேர் விழியார் மணமகனும்—தரைமீதில் 472

அம்மி மிதித்து அருந்ததியைச் சேவித்துச்
செம்மலெனுங்குளவிச் சீருசெய்து—ரம்மிதமாய் 473

அரசாணி சால்கரகம் அம்புவியின் மீதிறக்கிப்
பிரமண்ணும் பேய்க்கரும்பும் பேர்த்துவைத்துப்—புரம்பூமி 474

மஞ்சணீர் தான்வழங்கி மங்கிலியக் கூழ்தடவிச்
செஞ்சொல் மொழியாருந் தேவர்களும்—கொஞ்சியே 475

## மணமக்களுக்கு வரிசை செய்தல்

ஏழாநாள் நாகவல்லி யிதமாய்க் கழித்துமண
வாளனுக்கும் மங்கைக்கும் வரிசைசெய்தார்—நாளும் 476

செம்பொன்மக மேருமலை தெட்சணபா ரிசத்திலுள
செம்பொன்னு மேவளருந் தேசமதிற்—பைம்பொன்வினை 477

---

468. சீளித்த—சுவைமிகுந்த, சமைத்த எனினுமாம்
வீழிலை—வெற்றிலை.

469. கண்டன்—கணவன்.

473. குளவிச்சீர்—எழுதிங்கள் சீர் என்பர்.

474. அரசாணி—மணத்திற்குரிய அரசாணிப்பாத்திரம்.

476. "இயைந்த வதுவையெழுநாணீங்கலும்" 104

"ஆரா வன்பினோ டகன்ற வெழுநாள்
ஏழாண் டமைந்த தன்மை யளாயினும்"

கொங்குவேள் மாக்கதை. 3-22 பதுமாவதி வதுவை

திராவிடதே சத்திற் சேர்கொங்கு மண்டலமும்
வராதி யருள்பாண்டி மண்டலமும்—தராதலமாய்ச் 478

சோழன்வளர் மண்டலமும் சொன்மூன்று மண்டலத்தில்
வாழுகின்ற நீல மலைச்சார்பில்—நாளும் 479

மேருநிக ரானகிரி வேணதெல் லாங்கொடுத்து
வாரிநிக ரானகங்கை மாநதியும்—பாரதனிற் 480

காவேரி யாறுபெண்ணை காவேரி யாம்பரந்து
காவேரி யானவைகை கணநதியுங்—காவேரி 481

பட்டாம்பி என்னும் பரவைநதி யார்பிறந்த
எட்டாறு சூழுலகம் ஈந்தனர்காண்—மட்டவிழும் 482

பழுதற்ற செல்வம் பரந்து மிகவாழும்
எழுபத்தொன் பதுநாடு மீந்தருளித்—தொழுதுற்ற 483

காமாட்சி யம்மைவளர் காஞ்சிபுர மாநகரந்
தாமாட்சி யான தலையூரும்—நாமாட்சிப் 484

பட்டணமும் பாளையமும் பட்டிபுரம் பள்ளிகுடி
கொட்டில்குளம் வாவிகிணர் கோயிலென்று—மட்டில்லா 485

ஊருங் குடிவழங்கி ஒண்ணுதலோன் தான்மகிழ்ந்து
காருமழை மேகக் கடகரியீந்—தாரும்வனத் 486

திந்திரனூர் மேகமதி லேகியே மீண்டுவருங்
கந்துகமுஞ் சேனைரதம் கைக்கொடுத்தார்—அந்திவண்ணன் 487

---

478. திராவிட தேசம்—தமிழ்நாடு; வராதி—சிவன். கொங்கு—தேன், மணம் நிறைந்த நாடு என்பர். கொங்கு என்னும் நகரைத் தலைநகராகக் கொண்ட நாடு. இது வைகாவூர் நாட்டிலுள்ளது. இது சேரர் கொங்கு எனப்பெறும்.

479. நீலமலை—கருமலை. இது மூன்றரசருக்குரியது.

481. ஆம்பரந்து—அமராவதி.

482. பட்டாம்பி என்பது கேரளத்தில் பாலக்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர். பத்து ஆறுகள் சேர்ந்துவரும் ஆற்றுக்கு பட்டாம்பி எனப்பெயராயிற்று என்பர். பத்து + அம்பி பத்தாம்பி—பட்டாம்பி. ஆற்றின் பெயர் அதனை அடுத்த ஊருக்கும் பெயராயிற்று. அவற்றில் கலக்கும் வரட்டாறு, வாழையாறு, கோரையாறு, கல்பாத்தியாறு முதலிய எட்டாறுகள் செல்லும் நிலப்பகுதியே இங்கு 'எட்டாறு சூழும் உலகம்' என்றது. பட்டாம்பி கடலிற் கலக்கின்றது. பரவை—கடல்,

486. ஒண்ணுதலோன்—சிவன்.

487. அந்திவண்ணன்—சிவன்.

ஆழிக் கடல்சூழு மம்புவியோர் போற்றுகின்ற
மேழிக் கொடியின் விருதுடனே—வாழுமெனத் 488

தங்கு நவமணிபொன் சரமல ராமென்னுஞ்
செங்குவளை மாலை சிரசில் வைத்தார்—சங்குநிற 489

வண்ணன் எனும்பெரிய மகாபெல பத்திரனார்
அண்ணல் பிடித்த வலாயுதமும்—வண்ணமுள 490

பஞ்சவர்ணப் பாவாடை பஞ்சவர்ண டாலுடனே
பஞ்சவர் ணக்குடையும் பாலித்தார்—விஞ்சுரண 491

வீரகழல் வெண்டயமும் வீரகண் டாமணியும்
வீர முரசுசங்கு வீரசின்னம்—தாரையொடு 492

தம்பட்ட வார்திசையில் தம்பட்ட மேமுழங்கத்
தம்பட்ட மல்லாரி தான்வழங்கி—அன்புற்ற 493

அத்திரமும் வாள்கணையும் அயில்சூல மும்மழுவும்
வத்துவுடன் மாலும் வழங்கினர்காண்—வித்தாரப் 494

பெட்டகமும் வெண்கவரிப் பொன்பேழை யாபரணம்
பட்டுக் கலைநிதியும் பாலித்தார்—கட்டில் 495

தூங்குமஞ்ச மெத்தையொடும் தோழியருங் காளாஞ்சி
தாங்கவரி யாசனமும் தானீந்து—நீங்காத 496

அட்டா சுரியம் அதிலிரட்டிச் சம்பத்து
மட்டில்லாச் செல்வம் வழங்கினர்காண்—கெட்டியாய் 497

வாழ்த்தி வரங்கொடுத்தார் மாபெரிய செல்வமொடு
பார்த்திபரா யாண்டிருந்தார் பாரதனில்—கீர்த்திபெற்று 498

ஐம்பத் தறுதேசத் தரசர் மகளீரைக்
குர்பத் தனமணமுங் கொண்டாடி—இன்புற்ற 499

நாளதிலே புத்திரரும் நங்கையரும் உற்பவித்து
வாழும் பிதிரின் வழியினங்கள்—நாளும் 500

சதுர யுகத்திற்குத் தரணியுழு தாண்டிருந்தார்
கதிரவனும் சந்திரனுங் கண்களிக்க—அதிவிதமாய் 501

---

489. சோழநாட்டின் கிளைநாடுகள் 79 "எழுபத்தொன்பது நாட்டுக் குடியுடையான் சென்னி" எரெழுபது 5.

490. பெலபத்திரன்—பலராமன்; அலாயுதம்—கலப்பை.

497. அட்டாசுரியம்—8 வகைச் செல்வங்கள்: அடிமை, இராசாங்கம் சுற்றம், நெல், பொன், மக்கள், மணி, வாகனம்.

501. தரணி—பூமி; சதுரயுகம்—நான்கு யுகம்.

## மூவேந்தர்கள் வேளாளர்களை அழைக்கச் செல்லல்

கலியுகச காத்தமதில் கனக முடிச்சேரன்
வலியவனுஞ் சோழ மாராயன் — கெலிவுடைய 502

பாண்டியனு மிம்மூவர் பாராளு நாளதிலே
வேண்டுங் குடியினங்கள் வேண்டுமென்றே—நீண்ட 503

நீல மலைச்சார்பில் நெடுநாள் திரிந்தலைந்த
காலமதில் யானைரத கந்துகமும்—ஓலமிடக் 504

## மூவேந்தர்களை வேளாளர்கள் உபசரித்தல்

காராளர் வேளாளர் காதிற்கேட் டோடிவந்து
தாரார் முடிமனரைத் தான்றழுவிச்—சீரான 505

பொங்குதிருப் பாற்கடலும் புவிமேல் தயிர்க்கடலும்
தங்குகருப் பங்கடலும் தானழைத்துக்—கொங்கர்பிரான் 506

சோழன் வழுதியர்கோன் சொல்மூன்று மன்னவர்க்கு
ஆளோ டணிகுதிரை யானைகட்கும்—வாழ 507

நெய்யாறு பாலாறு நிரம்ப விருந்தளித்துச்
செய்யபழுக் காயிலையுந் தின்றபின்பு—ஐயரே 508

எளியேங்கள் வாழும் இந்தக் கருமலையின்
வழியாக வந்த வயனமெல்லாம்—ஒழியாமல் 509

சொல்லுமென்று வேளாளத் தோன்றல் பகர்ந்திடவும்
மல்லலணி யிம்மூன்று மன்னவரும்—சொல்லக்கேள் 510

## மூவேந்தர்களும் வேளாளத் தலைவனைப் புகழ்தல்

கங்கா குலத்தரசே காராள மன்னவனே
ஐங்கரனை மானும் அரும்பொருளே—எங்களிட 511

தாகந் தணிக்கும் தயாநிதியே தற்பரமே
ஆகும் பொருட்கல்வி அறிவோனே—மோக 512

வெள்ளமெனும் கங்கைக்கும் மேதினிக்கும் மால்சிவனார்
பிள்ளையென வந்த பெருமாளே—தெள்ளு 513

---

504. கந்துகம்—குதிரை.

507. வழுதியர்கோன்—பாண்டியன்

509. கருமலை—இது கோடைக்கானல் மலைத்தொடர்ச்சி.

மறைக்கு முதலவனே வந்திரந்தோர் தங்கள்கலி
குறைக்க நிதியருளுங் கொடையாய்—இறைக்கு 514

அறுத்திட்ட பிள்ளை யழைத்தளவில் ஓடிவரும்
சிறுத்தொண்ட ஞன சீமானே—செறித்தபுவி 515

எண்பத்து நான்குநூ ருயிரஞ் சீவர்களும்
கண்பெற்ருேம் என்றுசொலுங் கற்பகமே—பொன்பெற்ற 516

## மூவேந்தர்கள் வேண்டுகோள்

வாழ்வுடைய கையாய் வழுத்தக்கேள் எங்கள்குடைக்
கீழுலகி லேவிளைவு கிட்டாமல்—பாழாகிப் 517

போனதினுல் நாங்கள் பொன்பீடம் பொன்முடிகள்
ஆனவெல்லாம் அங்கே அமைத்துவிட்டு—மானவனே 518

குடியரசர் தம்மைக் கூட்டிவர வேண்டுமென்று
படியுலக மெல்லாம் பார்த்துவந்தோம்—முடியதனைச் 519

சூட்டிஞ லும்பெருமை தொல்புவியோர் சொல்வார்கள்
கேட்டருளீர் நாங்கள்செயும் கேண்மைதனை—நாட்டிலே 520

ஆறில் ஒருபங்கு அரசர்க் களித்துவிடூர்
வேறுவரி ஒன்றும் வேண்டிலோம்—கூறுபுகழ்ச் 521

சரியா சனத்திருத்தித் தந்தைதாய் பிள்ளையைப்போல்
மரியாதை யாகவுநாம் வைத்திருப்போம்—பெரியோரே 522

இந்தமொழி தப்போம் ஈஸ்பரனுர் தன்னுணை
வந்தருளீர் என்றந்த மன்னர்சொல—அந்தமலைக் 523

## வேளாளர்கள் வேந்தர்களுடன் செல்லல்

காராளர் வேளாளர் கன்னிமைந்தர் ஆவினமும்
ஏராள ராகி எழுந்தனர்காண்—பாராளு 524

மன்னவருஞ் சேனைரத மாவினமும் வெங்கயமும்
பொன்னி வளநாடு புகுந்தனர்காண்—அந்நாட்டிற் 525

காஞ்சி புரத்துறையும் காமாட்சி யம்மைபதந்
தஞ்சமென வணங்கித் தானிருந்தார்—அஞ்சுவகைக் 526

---

524. ஆவினம்—பசுக்கூட்டம்.

525 பொன்னிவளநாடு—முன்பு சோழநாட்டைச் சார்ந்திருந்த தொண்டைநாடு.

கசசாயந் தோசைவடை காய்பொரியல் முப்பழம்தேன்
எச்சாய் விருந்துகுடிக் கிட்டனர்காண்—உச்சிதமாய்ப் 527

## குடிப்பிரிவு செய்தல்

பூஷணமும் ஆடையொடு பூவுங் கதம்பமணிந்(து)
தேசப் பிரிவுகுடி செய்யவென்று—வாசமுடி 528

மன்னவரு மூவர்வந்து வல்லியெனும் செல்விமுன்பாற்
துன்னும் குடிப்பிரிவு சொல்லுமென்றார்—நன்னர்க் 529

களித்தண் டலைமோதுங் காவிரியின் மூழ்கினராய்க்
குளித்தண் டலைப்பேரூர்க் கோயிலிலே—முழுத்தமுடன் 530

நற்குடி நாற்பத்தி நாலிரண் டாயிரத்தை
அப்படியே மூன்று யதைப்பிரித்துப்—பொற்புடைய 531

பசுங்குடி பன்னிரண் டாயிரமும் பங்கிட்டுத்
துசங்களொடு மன்னவர்தன் தொல்புவியில்—புசங்கமுடன் 532

## மூன்று நாட்டு வேளாளர்

சேரனெனுங் கொங்கர்பிரான் சீமைகொங்கு வேளாளர்
பாரிற் குடித்தனங்கள் பண்ணினராம்—வீரமிக 533

வேண்டும் வழுதியர்கோன் மேதினியில் வந்தகுடி
பண்டியவே ளாளரெனப் பட்டம்வைத்தார்—நீண்டமுடிச் 534

சோழ மகராயன் தொல்புவியில் வந்தகுடி
சோழியவே ளாளரென்று சொல்லினார்—நாளும் 535

மூவரசர் தங்கள்குடி மூன்றுவித மாய்ப்பிரிந்து
ஆவலுட னங்கங் கமர்ந்தார்கள்—பூவுலகில் 536

## வேளாளர் உழவு செய்தல்

இந்திரனார் மேகமதை யேவி விடவருணன்
அந்தரத்திற் சென்று ஆழிதனில்—வந்தமுதங் 537

---

529. செல்வி—குளித்தலையை அடுத்துள்ள மதிற்கரைச் செல்லாண்டியம்மன்.

530. தண்டலை—சோலை; குளித்தண்டலை—குளித்தலை.

531. நற்குடி—நல்ல குடிமக்கள். (நாற்பத்தெண்ணாயிரவர்)

532. பசுங்குடி—உழவுசெய்யுங்குடி.

கொண்டெழுந்து வானிற் கொடிமின்ன லாயெழுந்து
அண்டம் வெடித்ததென ஆர்த்திடித்துச்—சண்ட 538

மாருதமு மார்ப்பரித்து மண்ணும்விண்ணு மேபரந்து
காரு மழைமேகக் காலிறங்கி—மாரிபொழிந் 539

தந்தமலைக் கானல்வன மருவி பரந்துசென்று
வந்துநதி யாறுகுளம் வாவிரம்பி—அந்தமழை 540

கண்டு மகிழ்ந்திந்தக் காராளர் பொன்னேரைக்
கொண்டுவந்து வைத்துழுது குறைதிருத்திப்—பண்டுள்ள 541

செந்நெல் விரைதெளித்துத் தேங்குபலா வாழைகனி
கன்னற் கமுகுமுதற் காவினமும்—பின்னுமுள 542

புஞ்சைநவ தானியமும் பூவுலகி லேபயிரிட்
டஞ்சலென வெவ்வுயிரு மகமகிழ்ந்து—நஞ்சைபுஞ்சைக் 543

கதிர்விளைவு கண்டவுடன் கனக முடியரசர்
சதுர்வேத நீதி தவறுமல்—அதிவிதமாய்த் 544

தேவா லயந்தொழுது சிலதான முங்கொடுத்துக்
கோவேந்தர் தங்கள் கொலுவிருந்தார்—பூவேந்தர் 545

வைத்த பயிர்விளைவு வந்ததிலே யாறிலொன்று
அத்தினத்தி லேயரச ருக்களித்து—மற்றதெல்லாங் 546

கொண்டு மனைபுகுந்து கோதையரு மைந்தருடன்
உண்டு சுகித்திருந்தார் உத்தமனே—மன்றில் 547

இரப்போர் கவிவாணர்க் கீந்து புகழ்பெற்று
நிரப்பான செல்வமொடு நீணிலத்திற்—சிறப்பான 548

நித்தியகல் யாணமொடு நீண்ட களிப்போடும்
சுற்றமொடு வாழ்ந்திருந்தார் தொல்லுலகில்—அற்றைநாள் 549

விந்தின் வழியாக விதவிதமாய் வேளாளர்
வந்துதித்தார் கொங்கு மண்டலத்தில்—அந்தந்தத் 550

## தொண்டை மண்டல வேளாளர்

தூண்டு ரதச்சோழன் துரைத்தனத்து நாளையிலே
ஆண்டசக்ர வர்த்தியெனும் அரசர்பிரான்—நீண்டமுடிக் 551

---

540. ரம்பி—நிரம்பி, முதற்குறை.

551. ரதச்சோழன்—தேர்ச்சோழன்.

காராள ராஜகுலக் கன்னிகையைத் தான்மணந்து
சீரான புத்திரரும் ஜென்மித்து—பாருலகில் 552

தண்டை சிலம்பசையத் தக்க்புகழ்த் தொண்டை
மண்டலவே ளாளர் மரபுரிமை—கொண்டார்கள் 553

## கார்காத்த வேளாளர்

தேவேந் திரனார்க்குத் தென்பாண்டி நன்னாட்டிற்
பூவேந்தர் தீபமொடு பொங்கல்வைப்பார்—கோவேந்தன் 554

புத்தர்மதங் கேட்டதனாற் புரந்தரற்குப் பொங்கலில்லை
இத்தலத்தில் வேண்டாமென் றியம்பியதால்—உத்துளியாய்த் 555

தேவேந் திரன்சினந்து சேனைபடை யானையொடு
பூவேந்தன் பாண்டியன்பாற் போர்பொருது—மாவேந்தர் 556

பட்டு விழுந்ததனாற் பார்வேந்த ரார்ப்பரித்துத்
தொட்டகணை யிந்திரனை யேதுரத்தத்—தட்டழிந்து 557

பொன்னுலகம் போய்ப்புகுந்தான் புரந்தரனார் ஏறிவந்த
மின்னுமிடி மேகவதை வேந்தன்பிடித்—தின்னிலத்தில் 558

காலில் தளைபூட்டிக் காவலிலே வைத்ததனால்
ஞாலந் தனிற்பாண்டி நாட்டாரும்—சீலமுள்ள 559

பாண்டியனைக் கைதொழுது பார்வேந்தே இந்திரனார்
தூண்டுமே கங்களெல்லாம் தூக்கித்தால்—நீண்டபுவி 560

மண்டலமும் மானிடரும் வைத்தபயிர் ஜீவசந்தும்
இன்றோ டிறந்துவிடும் என்றுசொலித்—தண்டமிழின் 561

மாறன் உரைபகர்வான் மண்டலம்இம் மூன்றினுக்குங்
காரு மழைகோடை கனபருவ—மாரி 562

---

552. தமிழரசர் வேளாளகுலப் பெண்களை மணம் செய்த கொள்ளல், "மன்னர் பாங்கிற் பின்னோராகுப" அகம். 32 சூத்திரத்திற்கு "முடியுடை வேங்கர்க்கு மகட்கொடைக்குரிய வேளாளராகுப" என நச்சினார்க்கினியர் கூறிய தொல்காப்பியவுரை முதலியவற்றான் விளங்கும்

555. உத்துளியாய்— ('வழக்குச்சொல்) மிகுதியாக; வழக்கமாகக் கொடுக்கும் பொருள்.

558. புரந்தரனார்—இந்திரன்; புத்தர்மதம் — புத்தமத நூல்கள்; கோவேந்தன்—பாண்டியன்.

562. மாறன்—பாண்டியன்.

பொழிந்து வருவனென்று பொன்னின்மலைச் சொக்கர்முன்பாய்
மொழிந்து பிறர்பிணையு முன்னின்றால்—தளைந்ததைவிட் 563

டிந்திரனார் வாகனத்தை இப்பொழுதே விட்டிடுவேன்
இந்தமொழி தப்பேன் எனமொழிந்தான்—அந்நகர்க் 564

காரா ளருங்கூடிக் கனகமுடிச் சோழநகர்
ஏராளர் தம்பால் இயம்பினர்காண்—சீராளர் 565

அந்த மொழிகேட்டு அதிற்சிறிது வேளாளர்
வந்துவழு தியர்கோனை வணங்கிச்—சந்திரகுல 566

வள்ளலே தூதரொடு வாகனரை மந்திரியைத்
தெள்ளு மறையோரைத் தேவர் தம்மைக்—கொள்ளையிட்டு 567

வெட்டிச் சிறையில்வைத்தார் மேதினியில் வாழ்ந்ததில்லை
விட்டுவிடீர் கார்மேக விண்ணவனை—அட்டியில்லை 568

ஓங்குமழை மாரியிந்த உலகுசெழிக் கப்பொழிவான்
நாங்களிதற் குப்பிணையென் றேநவிலத்—தீங்கில்லாப் 569

பாண்டியனார் மேகப் பரியின் தளைவிடுத்தான்
நீண்டகரு மேகம் நெடுவானில்—போந்ததினால் 570

அகமகிழ்ந்து சோழன் அம்புவியில் இந்திரனார்
மகதநகர் மண்டலமென் றேவகுத்துச்—செகதலத்தில் 571

ஏருக் கொழுமுனையால் எவ்வுயிர்க்கும் ஊணளித்த
காரைக்காத் தாரென்று கழறினராம்—பாரில் 572

## பலவகை வேளாளர்

ஐந்துவகைக் காராளர் அம்புவியில் வந்தார்கள்
விந்தின்வழி யின்னம்வெகு வேளாளர்—தந்த 573

---

563. பிறர்பிணை—அயலார் ஜமீன்.

566 வழுதியர்கோன்—பாண்டியன்.

568. கார்மேக விண்ணவன்—மேகம், இருபெயரொட்டுப் பண்புத் தொகை.

569. பிணை—ஜாமீன்.

570. மேகப்பரி—மேகமாகிய வாகனம்; தளை—விலங்கு.

571. மகதமண்டலம்—கார்காத்த வேளாளர்க்குரிய சோழநாட்டுப் பகுதி. "செங்கமா மேற்கு வடக்குநதி சேயாறு, பொங்குகடல் கிழக்குப் பூண்முலையாய்—சங்கமூர், வெள்ளாறு தெற்கு விளங்கு மகதையருக் குள்ளான நாடென் றுரை" பரதநூல்.

மதியினுற் கீர்த்தியால் மாலாற் புசபலத்தால்
விதியால் நடக்கையால் வெவ்வேருய்ப்—பதியாலுஞ் 574

சேரன் துளுவன் செகத்தி லடைத்தலையன்
நீருணிவே ளாளனெடு நீள்கொடிக்காற்—காராளர் 575

பவள மலையானும் பச்சை மலையானுந்
தவழ்பாலை வேளாளர் தம்முடனே—தவழும்வணிக் 576

காட்டுவே ளாளர்பள்ளிக் காராளர் நீரூற்று
நாட்டுவே ளாளனெடு நாப்பகுலன்—வேட்டைசெலும் 577

உடும்பறைவே ளாளரென் றுலகுதனில் இப்படியே
திடம்படுகங் காகுலருஞ் சென்மித்து—இடும்பணிதி 578

யாபரணஞ் சேலையுடை யாசாரஞ் செய்தொழிலுஞ்
சோபனமுஞ் சீர்முறைமை சொன்மொழியும்—பூபதியிற் 579

கோத்திர முங்குலமுங் கொண்டு கொடுப்பதுவும்
சாத்திரமும் வெவ்வேருய்த் தங்கடங்கட்—கேற்றபடி 580

தேசந்தோ றும்பாஷை திண்புவியில் வேறுரைத்து
நேச முடனிருந்தார் நீணிலத்தில்—ஆசையினுல் 581

மாநிலத்தி லேபிறந்த மானிடர்க்குந் தேவருக்கும்
யானை முதலெறும்பீ ருமுயிர்க்குங்—கானிற் 582

கனிகாய் கிழங்கிலையுங் கண்டுசெய்து நன்ருய்
இனிதாய் அமுதுலகுக் கீந்தனர்காண்—மனிதப் 583

## இடும்பன் வேளாளரைப் புகழ்ந்து குமரன் முன்பு அழைத்துச் செல்லுதல்

பிறப்பில் அவதரித்த பெரியோரே யுங்களிட
சிறப்பல்லால் வேறுண்டோ செகதலத்தில்-மறைப்பொருளும் 584

சாத்திரபு ராணமொடு சகலகலை யும்மேழிச்
சூத்திரத்தி னுலே துலங்குவது—கோத்திரமும் 585

நற்குலமு மேல்கீழும் ராசர் நெறிமுறைமைப்
பொற்கிரீ டம்சூடிப் புரப்பதுவும்—விற்பனரும் 586

நல்லோர்கள் என்பதுவும் ராச்சியத்தில் எத்தொழிலும்
எல்லாங் கொழுமுனையி னுலிலங்கும்—வல்லமைசேர் 587

---

578. உடும்பறை வேளாளர்—அவிநாசி வட்டத்தில் உள்ளனர்.

கங்கையருள் புத்திரரே காராள மன்னவரே
உங்கள் துயரை ஒழித்துவிடீர்—செங்கைவடி 588

வேலவர்பால் இந்தமொழி விண்ணப்பம் செய்வமெனக்
கோல முடியிடும்பன் கூட்டிச்சென்—ருலயமாஞ் 589

## வேளாளர்கள் சென்னிமலை யாண்டவரைத் துதித்துக் குறையிரத்தல்

சென்னிமலை மீதிருக்கும் செவ்வேள் கொலுவதனிற்
கின்னரருந் தும்புருவர் கெந்தருவர்—வன்னமுயர் 590

சந்திரருஞ் சூரியருந் தாரகையும் வானவரும்
இந்திரனோ டெல்லவரும் ஏவல்செய்ய—புந்துமறை 591

வேதம் துதிக்க விநாயகன்மால் தென்கயிலை
நாதன் மனமகிழ்ந்து நன்றெனவே—பூதலத்திற் 592

சிங்கா சனத்திருந்த சென்னி மலைக்குமரர்
பங்கயப்பா தத்தைப் பணிந்தெழுந்து—எங்களிட 593

வேந்தாகு காசிலம்பா வேலா புலவா
காந்தனெனுங் கார்த்திகையாய் கங்கைமைந்தா வாய்ந்தரத்னச் ()

சிங்கா சனத்திருந்த சென்னி மலைக்குமரா
சங்கார சாமியெனும் சாட்சியே—பொங்கமுதக் 595

காங்கயனே செவ்வேளே கடம்பா சரவணத்தில்
ஆங்குழந்தை யாயுதித்த ஆறுமுகா—வேங்கைமரா 596

வள்ளிதெய் வானை மகிழ்நனெனும் மான்மருகா
தெள்ளிமயி லேறிவரும் சேவகனே—வெள்ளிமலை 597

அரனார் அருள்முருகா அடியேங்கள் உன்பதத்தை
ஒருநாள் மறப்பதில்லை உத்தமனே—இருபோதுங் 598

காராள ரைப்புவியிற் காத்துப் பவிசுதவித்
தாருமுடி மன்னரிவர் தாமெனவே—பாருலகிற் 599

களிகூர வாழ்ந்துதவுங் கமல பதத்திருத்தி
அழியாப் பதத்தை அருளுமெனத் தொழுதவுடன் 600

---

591. தாரகை—நட்சத்திரம்.

600. வாழ்ந்து—வாழச்செய்து

முகமலர்ந் தேகனிவாய் மொழிபகர்ந்து யாதினுக்குஞ்
செகமதனில் அஞ்சாமை செப்புமென்றார்—குகனுடனே 601

இடும்பன்வே ளாளர்மனத் திடுக்கணெல் லாமொழியக்
கடம்பனெனும் சென்னிமலைக் கடவுளுங்கேட்—டிடம்பெரிய 602

## சென்னிமலையாண்டவர் வேளாளருக்கு அபயமளித்து அருள் செய்தல்

பூமியருள் புத்திரற்குப் பொல்லாதா ராயிருந்து
நேமியர சாண்டிருந்த நீசர்களைக்—காமச் 603

சுரதமதத் தால்வசை சொல்லுங் கபடர்களை
வீரதமொடு நோன்பு விலக்கினரைச்—சரதமொடு 604

நன்றி மறந்தோரை நாட்டிலில் லாவரியை
உண்டுசெய்த பாதகரை உலகுதனில்—கொன்றிடவே 605

செங்கைவடி வேல்விடுத்துச் செகதலத்தில் துர்ச்சனரை
அங்கம் பிளந்து அறுத்தெறிந்தார்—இங்கிதமாய் 606

நமனுருங் கண்களிக்க நாட்டிலுள்ள துர்ச்சனரை
எமனுருங் கொண்டுசென்று ஏகிடவே—குமரவேள் 607

காரா ளரைநோக்கிக் காசினியில் உங்கள்துயர்
தீரப் பகைஞர் சிரமறுத்தோம்—பாரதனில் 608

நீதி நெறியும் நேயம் உபாயமுயர்
சாதி மரபதுவும் சகலகலை—வேதமுடன் 609

ஆய்ந்துதவப் பேறுடனே அம்புவியி லேநீங்கள்
வாழ்ந்தரசை யாளுமென வரங்கொடுத்தார்—பூந்துறையில் 610

விடைபெற்று வேளாளர் மேதினியிற் றங்களிட
கொடிபெற்ற நாடதனிற் குடியிருந்தார்—அடைவே 611

---

601. அஞ்சாமை—அபயம்.

603. நேமி—பூமி.

604. சரதம்—சத்தியம்.

608. பூந்துறை:—கொங்கு 24 நாடுகளில் தலைமையானது. இதன் தலைநகர் பூந்துறை. இது ஈரோட்டிலிருந்து காங்கயம் செல்லும் வழியில் எழு மைலில் உள்ளது.

## வேளாளர் நல்வாழ்வு

சத்தமே கமுமெழுந்து சமுத்திரத்து நீர்முகந்து
இத்தலம் வானம் இருள்பரந்து—சத்தியென 612

மின்னி யிடியிடித்த மேதினியிற் காலிறங்கி
நன்னீர் மழைபொழியு நாடெல்லாம்—துன்னும் 613

பள்ளம் படுகுழியும் பக்கமடு வாவிகுளம்
வெள்ளம் பெருத்தாறு மேவியே—மெள்ள 614

ஓடிவந்து காராள ருலகத்துள் ளோர்களித்
தாடியணை வாய்க்கால் அதுதேக்கி—நாடதனிற் 615

கதிர்விளைவு தன்னுடனே கனிகாய் கிழங்கிலையும்
விதவிதமா யுண்டுசெய்தே மேதினியில்—அதிவிதமாய்ச் 616

செங்குவளை மாலையுடன் செகமோ கனவிருதும்
திங்கரண மேழித் துவசமுடன்—சிங்கடால் 617

ஆடுங் கடைமணியை அசையாம லேநிறுத்தி
நாடு தனைப்புரந்தார் நானிலத்தில்—தேடரிய 618

## நூற்பயன்

தொண்ணூற்றி யேழுபுகழ் தொல்புவியி லேபடைத்து
இந்நிலத்தில் வாழ்ந்தார்கள் இக்கதையைப்—பன்னுதமிழ் 619

பாடிப் படித்தோரும் பரிவுடனே கேட்டோரும்
நாடி மனதிலிதை நத்தினரும்—தேடியே 620

ஏட்டில் எழுதினரும் இந்திரனிந் திராணியைப்போல்
நாட்டில் இருந்துநன்மை நணுகுவரே! 621

---

612 சத்தியென—முருகனுடைய வேல்போல.

613. 'மன்னர் மன்னவன் மண்டமர் கடந்தவள் வேலின் மின்னி'
—நைடதம்.

618. புரந்தார்—பாதுகாத்தார்.

## வாழி

காழியெனும் பிராட்டி கருத்தில் வாழி
கயிலாச நாதருமை கருணை வாழி

கோழியெனுங் கொடிபடைத்த குமாரர் பாகம்
குமரிவள்ளி தெய்வானை கூடி வாழி

வாழிமயில் வேலுடனே வளரும் சென்னி
மலையிடும்பன் கமலபத மனதில் வாழி

மேழிவள மானகதை சொன்னோர் வாழி
வேளாளர் புவியதனில் விளங்கி வாழி !

தெண்டிரை யாழி சூழுஞ்
செகதலம் தன்னி லுள்ள

தண்டமிழ்ப் புலவோர் வாழி
சதுர்மறை வேதம் வாழி

மண்டலத் தரசர் வாழி
மாநிலம் தன்னில் எங்கும்

கொண்டலும் மாரி பெய்து
குவலயம் செழிக்க வாழி !

1. காழி—காளி, திரு[illegible]ந்தைப் பிராட்டி.

...அச்சகம், ஈரோடு.

## நூல் கிடைக்குமிடங்கள் :-

(1) **வித்துவான் ஆ. இராமசாமி,**
தமிழாசிரியர்,
55, ஈங்கூர் ரோடு, சென்னிமலை.

(2) **வித்துவான் வே. ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர்,**
வேலம்பாளையம்,
எழுமாத்தூர் (போஸ்டு) ஈரோடு (வழி)

(3) **இளங்கோ புத்தகசாலை,**
6, முத்துரங்க முதலியார் வீதி, ஈரோடு.

[illegible] அச்சகம், ஈரோடு.